தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் ஆண்டு ௧௯௯௬	மலர்
	குரோதி, பங்குனி.	
௪௰	1965 பிப்ரவரி, மார்ச்சு.	௧௨.

ஆராய்ச்சி அரங்கம்:

வரையறுத்த பொருளில்

வள்ளுவச் சொல்லாட்சி

"ஒளி என்றால் என்ன? புகழ் என்றால் என்ன? இவைகள் ஒரே பொருள் உடையவை போலத் தோன்றுகின்றனவே, உண்மையிலேயே அப்படித்தானா?......துன்பமும் அல்லலும் ஒன்றா? துன்பமும் இடும்பையும் ஒன்றா? ஒரே பொருளுடைய பல சொற்களாகக் கருதப்படும் இவைகளுக்குள் பொருள் வேறுபாடு இல்லையா? திருவள்ளுவர் இவைகளைப் பற்றி நமக்கு விளக்கம் தர முடியுமா?"

தில்லித் தமிழ்ச் சங்க ஆராய்ச்சி அரங்கத்தின் 5-வது கூட்டத்தில், இந்தக் கேள்விகளோடு தமது ஆராய்ச்சி உரையைத் தொடங்கினார் திருமதி கனகசவுந்தரி இளந்திரையன். "வரையறுத்த பொருளில் வள்ளுவச் சொல்லாட்சி" என்ற தலைப்பில் 7-3-65 மாலை அவர் நிகழ்த்திய ஆராய்ச்சி, ஒருபொருட் பன்மொழிகளாகத் திருக்குறளில் வரும் சொற்கூட்டங்களில் சிலவற்றை விவரித்து விளக்குவதாக அமைந்தது...திருமதி இளந்திரையன் தொடங்கி வைத்த இவ் ஆராய்ச்சி உரையில் திருவாளர்கள் க. ஆறுமுகம், பார்த்தசாரதி இருவரும் தனித்தனி ஒவ்வொரு சொற்கூட்டம் பற்றிய தங்கள் கருத்துக்களையும் படித்தார்கள்.

திருமதி கனகசவுந்தரி பேசியதாவது: "ஒளி, புகழ் என்னும் இரண்டு சொற்கள் சற்றேறக்குறைய ஒரே பொருளைக் குறிப்பவை போலக் கருதப்பட்டு வருகின்றன. ஆனால் வள்ளுவத்திலும் வேறு சில இலக்கியங்களிலும் இவை தனித்தனிப் பொருள் உடையவைகளாகவே ஆளப்பட்டுள்ளன. நாலடியாரில் செல்வ நிலையாமையைப் பற்றிப் பேசும்

ஒரு பாட்டில், "உண்ணுன் ஒளிநிறுன் ஓங்கு புகழ்செய் யான்..." என்ற பகுதி வருகிறது. செல்வத்திஞல் ஒருவன் ஒளியையும் தேடவேண்டும் புகழையும் தேட வேண்டும் என்பது இதன் கருத்து.

"ஒளி என்ருல் என்ன என்ற விஞவுக்குப் புறநானூற்றுப் பாடல் ஒன்று ஓரளவு விளக்கம் தருகிறது:

"இரும்புமுகம் சிதைய நூறி, ஒன்ஞர்
இருஞ்சமம் கடத்தல் ஏஞேர்க்கும் எளிதே;
நல்அரா உறையும் புற்றம் போலவும்,
கொல்ஏறு திரிதரு மன்றம் போலவும்,
மாற்றுஅருந் துப்பின் மாற்ருேர், 'பாசறை
உளன்!'என வெரூஉம் ஓர்ஒளி
வலன்உயர் நெடுவேல் என்ஐ கண்ணதுவே."

இதிலேவரும் 'ஒளி' தனிஒருவனின் வீரத்துக்குமக்கள் செலுத்தும் அச்சம் கலந்த ஒரு வகையான மரியாதையைக் குறிப்பிடுகிறது. இதை "வீரச்செல்வாக்கு" என்ற தொடரால் குறிப்பிடலாம் போலத் தோன்றுகிறது.

இதுபோன்ற மற்ருெரு செல்வாக்கைத் திருவள்ளுவர் குறிப்பிடுகிருர்: 'இளையர் இனமுறையர் என்று இகழார், நின்ற ஒளியோடு ஒழுகப்படும்' என்பது மன்னரைச் சேர்ந்து ஒழுகல் என்னும் அதிகாரத்தில் வரும் ஒரு பாட்டு. (அறிவு, செங்கோல், வீரம், ஈகை முதலியவற்ருல் ஏற்படும் சிறப்புக்கள் தவிர.) அரச பதவிக்கே ஒரு மதிப்பு இருக்கிறது, அதை மறந்து யாரும் பழகக்கூடாது என்பது இதன் கருத்து. இது அரசருடைய தனிச்சாதனைச் சிறப்பு அல்ல; அவன் வீற்றிருக்கும் பீடத்திற்கு உள்ள சிறப்பு. இதைப் பதவிச் செல்வாக்கு என்று குறிப்பிடலாம்.

"சிந்தாமணியில், 'உறங்குமாயினும் மன்னவன் தன்ஒளி, கறங்கு வெண்திரை வையகம் காக்கும்...' என்று வருகிறது. இதுவும் அரசபீடத்திற்கு உரிய பதவிச் செல்வாக்கையே குறிக்கிறது.

"இவைகளைக் கொண்டு ஆராய்கின்ற போது, ஒளி என்பது, ஒரு மனிதன் வாழும் காலத்தில் அவனுக்கு இருந்து வரும் செல்வாக்கு' என்று முடிவுக்கு வரத் தோன்றுகிறது. 'ஒளி ஒருவற்கு உள்ள வெறுக்கை' எனவும், 'ஓஒதல்வேண்டும் ஒளி மாழ்கும் செய்வினை, ஆஅதும் என்னும் அவர்' எனவும் வரும் குறட்செய்யுளில் இதுவே தெளிபொருளாக உள்ளது. குறள் உரையாசிரியர்களுள் சிறந்த ஒருவராகிய பரிமேலழகி

யாரும், 'தாம் உளகாலத்து எல்லாராலும் நன்கு மதிக்கப் படுதல்' (653) என்றும், தான் உளனாய காலத்து மிக்குத் தோன்றுதலுடைமை' (971) என்றுமே இச் சொல்லுக்குப் பொருள் எழுதுகின்றார்.

''புகழ் என்னும் சொல் ஒளிக்கு மாறுபட்ட பொருளைக் குறிக்கவில்லையாயினும், ஓரளவு வேறுபட்ட பொருளைக் குறிக்கிறது.

> ''மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
> தம்புகழ் நிறிஇத் தாம் மாய்ந்தனரே.''

என்பது புறநானூறு. இதிலே, புகழ் என்பது ஒருமனிதன் இறந்த பிறகும் நிலைத்து நிற்கக்கூடிய அவனைப் பற்றிய சிறப்பு என்ற குறிப்புத் தொனிக்கிறது. 'பொன்றும் துணை யும் புகழ்' (உலகம் அழியும் வரை சிறப்பு), உரைப்பார் உரைப்பவை எல்லாம் ஒன்று ஈவார் மேல் நிற்கும் புகழ்' முதலியனவும் பிறவும் இப்பொருளை வலியுறுத்துதல் தெளிவு.

''எனவே, ஒருவர் வாழும் காலத்தில் அறிவு; வீரம், பதவி, கொடை முதலியவற்றால் பெற்றிருக்கும் செல்வாக்கை ஒளி என்றும், அவர் இறந்த பிறகும் அவருக்கு இருந்துவரும் பாராட்டைப் புகழ் என்றும் சொல்லலாம். ஒளியுடையவ ராக வாழ்ந்தவர்க்குப் புகழ் இருக்க வேண்டும் என்ற கட் டாயமில்லை: புகழ் உடைய ஒருவர் ஒளியுடையவராக விளங்கி யிருக்கத்தான் வேண்டும் என்று கட்டாயமில்லை; ஒளியும் புகழும் ஒருவருக்கு இருக்கலாம் என்பதிலும் தடையில்லை.

''இன்பமும் துன்பமும் மனத்தின் இருவேறு நிலைகளே என்பர். யாதானும் ஒன்றை வேதனை தருவதாகக் கருதும் மன இயல்பையே வள்ளுவமும் துன்பம் என்று குறிப்பிடு கிறது.

> ''மறவற்க மாசற்றார் கேண்மை; துறவற்க
> துன்பத்துள் துப்பாயார் நட்பு''
> ''இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
> துன்பம் உறுதல் இலன்''
> ''இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
> துன்பம் துடைத்தூன்றும் தூண்.''

எனவரும் பாடல்களில்; தன்னைத்தானே வேதனைப் படுத்திக் கொள்ளும் மன இயல்பே துன்பம் என்பது தெளிவாக உள் ளது. 'துன்பத்திற்கு யாரே துணையாவார், தாமுடைய நெஞ் சம் துணையல் வழி?' என்னும் காமத்துப்பால் பாடலும் இதைத் தெளிவுபடுத்துகிறது.

"அல்லல் என்பதையே துன்பம், தொல்லை என்றெல்லாம் நாம் கருதுகிறோம். அதாவது மற்றவர்கள் நமக்குச் செய்யும் இன்னலே அல்லல். ஒருவர் மற்றவர்க்குச் செய்யும் வேதனையை அல்லல் என்றே குறிப்பிடுகிறார். வள்ளுவர். அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர்', 'அல்லல் உழப்ப தாம் நட்பு' முதலியன இப்பொருளை உணர்த்துகின்றன.

"நன்றாங்கால் நல்லவாக் காண்பவன், அன்றாங்கால்
அல்லல் படுவது எவன்?

என்னும் பாட்டில் "அல்லல்" என்னும் சொல்லாட்சி மிகப் பொருத்தமாக அமைந்துள்ளது. இவனுடைய நன்றுக்கும் அன்றுக்கும் இவன் முன்பு செய்துள்ள செயல்களே காரணம். ஆனால் நன்று வரும்போது தானே செய்தது என்று எண்ணிகிழ்கிறான். அன்று ஆகும்போது (அதுவும் தனக்குத் தானே செய்து கொண்டது என்று உணராமல்), வேறு யாரோ தனக்குச் செய்தது (அல்லல்) என்று எண்ணுகிறான். இதனாலேயே வேதனைப்படுகிறான். அது உண்மையில் இவனுக்கு வேறொருவன் செய்த அல்லல் அல்று, இவன் அதனை அல்லல் என்று எண்ணிக் கொள்ளுகிறான் என்பது பொருள்.

"இடும்பை அல்லது இடுக்கண் என்பதையும் நாம் பொதுவாகத் துன்பம் என்ற பொருளிலேயே ஆள்கிறோம் ஆனால் ஒரு முயற்சியின் போது குறுக்கிடும் தடைகளையும் அவற்றின் விளைவான தொல்லைகளையுமே இடும்பை என்கிறது வள்ளுவம். இடையூறு என்பதே இச்சொல்லின் நேரான பொருள்:

"வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும்."
"இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்
குற்றம் மறைப்பான் உடம்பு."
"இடுக்கண் வருங்கால் நகுக, அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல்"

என வரும் பாடல்களில் இடும்பை, இடுக்கண் என்ற சொற்களுக்கு, முயற்சியின் போது ஏற்படும் இடையூறு என்பதே பொருள்."

அடுத்துப் பேசிய திரு. க. ஆறுமுகம், பீடு, பெருமை சிறப்பு, மாண்பு என்னும் சொற்களின் பொருளாட்சியை விளக்கினார்: பீடு என்பது பெருமிதம்; பெருமை என்பது செயற்கரிய செய்யும் ஆற்றல்; மாண்பு என்பது நற்குண நற்செய்கைகள் உடைமை; சிறப்பு என்பது மற்றொன்றினைவிட உயர்ந்திருப்பது. சிறப்பு என்றாலே உயர்வு அல்லது மிகுதி

என்பது பொருள். உயர்வுச் சிறப்பும்மை என்று இக்காலத்தார் வழங்குவதை உரையாசிரியர்கள் சிறப்பும்மை ஏன்றே வழங்கியுள்ளனர்.

"மருந்தோ மற்றுஊனோம்பும் வாழ்க்கை, பெருந்தகைமை
பீடழிய வந்த இடத்து."

என்னும் ஓர் இடத்தில் மட்டும் பீடு என்பது (பரிமேலழகர் உரைப்படி) வலிமை என்ற பொருளில் வருகிறது."

திரு. பார்த்தசாரதி உள்ளல், நினைத்தல், எண்ணல் என்னும் சொற்களைப் பற்றிய தமது ஆராய்ச்சியை நிகழ்தினர்: "இடையருமல் (தொடர்ந்து) இருந்து வரும் மன நிகழ்ச்சியை உள்ளல் என்றும், ஆராய்தலை நினைத்தல் என்றும், திட்டமிடுதலை எண்ணல் என்றும் வள்ளுவர் ஆள்வதாகத் தெரிகிறது. நினைத்தால் என்னும் சொல் ஓரிரண்டு இடங்களில் முன்பு நிகழ்ந்ததை நினைவு கூர்தல் (ஞாபகப்படுத்துதல்) என்னும் பொருளிலும் வருகிறது.

"எழுமை எழுபிறப்பும் உள்ளுவர், உள்ளியது எய்தல் எளிதுமன்,உள்ளியதெல்லாம்உடனெய்தும்,என்பனபோன்ற இடங்களில் இடையருத நினைவு என்ற பொருளில் இச்சொல் வருகிறது. கொன்றன்ன இன்னு செய்யினும் அவர் செய்த ஒன்று நன்றுள்ளக் கெடும்' என்ற இடத்தில் உள்ளல் என்ருல் ஞாபகப்படுத்தி கொள்ளுதல் என்றே பொருள்படுகிறது.

"வினை பகை என்றிரண்டிள் எச்சம் நினையுங்கால்
தீஎச்சம் போலத் தெறும்."

எனவும்,

"நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே
எனைத்தொன்றும்
எவ்வ நோய் தீர்க்கும் மருந்து."

எனவும் வரும் இடங்களில் நினைத்தல் என்ருல் ஆராய்தல் அல்லது சிந்தித்தல் என்ற பொருள் தெளிவாக உள்ளது. ஆனல், 'வலியார் முன் தன்னை நினைக்க தான் தன்னின் மெலியார் மேல் செல்லும் இடத்து' என்ற பாட்டில் இப்பொருள் சற்றே மாறுபடுவது போலத் தெரிகிறது.

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்."

என்பது முதலாக எல்லா இடங்களிலுமே எண்ணல் என்பது திட்டமிடல் என்ற பொருளிலேயே வருகிறது."

மூவர் நிகழ்த்திய ஆராய்ச்சியைத் தொடர்ந்து திருவாளர்கள் சாலை இளந்திரையன், சீனிவாசவரதன், சுப்பிரமணியன் ஆகியோர் கருத்துறை நிகழ்த்தினர்கள். அல்லல், சிறப்பு,

நினைத்தல், உள்ளல் ஆகிய சொற்களுக்கு ஆராய்ச்சியாளர்கள் தந்த வரையறைகளை மூவரும் பாராட்டினர். திரு. சாலை இளந்திரையன், ஆராய்ச்சியாளர்கள் அய்யப்பாடு கொண்ட இடங்களைப் பற்றிப் பேசினார்:

"மருந்தோ மற்றுஊனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த இடத்து."

என்னும் பாட்டு மானம் என்னும் அதிகாரத்தில் வருகிறது. இதிலே, பெருந்தகைமை என்பதற்குக் குடிப்பிறப்பு என்றும் பீடு என்பதற்கு 'அதன் வலியாகிய மானம்' என்றும் பொருள் கொள்ளப்படுகிறது. இதையே, குடிப்பெருமையால் வரும் பெருமிதமே இங்கு மானமாகக் கொள்ளப்பட்டுள்ளதாகக் கருதினால், "பீடு" பெருமிதம் என்ற பொருளிலேதான் வருகிறது என்பது அமையும்...

"கொன்றன்ன இன்னா செய்யினும் அவர்செய்த
ஒன்று நன்றுள்ளக் கெடும்."

என்ற பாடலில் வரும் "உள்ள" என்னும் சொல், 'முன்பு செய்த ஒன்றினை இடையறாது நினைத்துக் கொண்டிருக்க' என்று பொருள்படுமாறே அமைந்துள்ளது; 'நன்றி மறப்பது நன்றன்று' என்னும் முந்திய பாட்டின் கருத்தோடும் இது பொருந்துகிறது. வலியார் முன் தன்னை நினைக்க...என்னும் பாட்டிலும், தன்னைவிட மெலியவர்கள் மேல் செல்லும்போது தன்னைவிட வலியவர்கள் தன்மேல் வந்தால் எப்படி இருக்கும் என்பதைச் சிந்திக்க வேண்டும் என்பதே பொருள். ஆதலால் 'நினை' என்ற சொல் இங்கேயும் ஆராய்ந்துபார் அல்லது சிந்தித்து உணர் என்னும் பொருளிலேயே வருகிறது."

நச்சினார்க்கினியர் என்னும் உரையாசிரியர், ஒருபொருட் பன்மொழிகள் ஒவ்வொன்றும் தத்தமக்குரிய வரையறுத்த நுட்பமான பொருள் வேறுபாடு உடையன என்ற கருத்து உடையவர். இவருடைய உரைகளைப் படிக்கையில் இவர் இக்கருத்தே கொண்டிருந்தாரென்பது விளங்குகிறது. திருக்குறள் உரையாசிரியர்கள் யாரும் இந்த நோக்கில் பார்த்திருப்பதாகத் தெரியவில்லை. அந்த நோக்கில் திருக்குறளுக்குப் பொருள் காண முயன்றால் திருக்குறளின் வேறுபல புதைபொருள்கள் விளங்குவதோடு, அதன் இலக்கிய நயமும் மிகுதியாகப் புலப்படும் என்பது இந்த ஆராய்ச்சியால் இனிது விளங்கியது.

—சாலை இளந்திரையன்.

கையறவு

Dr. சு. நடேசன். B. A., B. L.,(இலங்கை)
(1895—1965)

Dr. சு. நடேசன் அவர்கள், 1965. சனவரி. 16-ஆம் நாள், மண்ணகவாழ்வு நீத்ததமை அறிந்து மிகவும் வருந்துகின்றோம்.

Dr. சு. நடேசன் அவர்கள், இலங்கையரசின் முன்னாள் அமைச்சராக இருந்தவர். இலங்கைப் பாராளுமன்ற வுறுப்பினராகவும் யாழ்ப்பாணத்துப் பரமேசுவரக் கல்லூரித் தலைவராகவும் திகழ்ந்தவர். தமிழ்த்துறையின் வளர்ச்சியில் பல்வகையானும் தொண்டு புரிந்தவராவர்.

இப்பேரறிஞர், தஞ்சையில் சென்ற நூற்றாண்டிற் சிறப்புற்றிருந்த இலக்கணம்-இராமசாமிப் பிள்ளையவர்களின் மகன் வழிப்பேர்த்தியின் மகனாவார். இலக்கணம் இராமசாமிப்பிள்ளை, இலங்கைநாட்டுப் பேரறிஞர். வீரத்திரு. பொன். இராமநாதன் அவர்களின் ஞானாசிரியனாவார். வீரத்திரு. பொன். இராமநாதன், தன்ஞானாசிரியனின் வழித்தோன்றலாகிய, சு. நடேசனைத் தன் மருகராக ஏற்று மகிழ்வுற்றார்.

தஞ்சை நகரின் கீழ்ப்பால் வேளாண்குடி மக்கள் மிகுந்துள்ள குறிச்சித்தெருவில், 1895 ல் மன்மத ஆண்டில் அ. சுப்பையாப்பிள்ளை—அங்கயற்கண்ணியம்மை ஆகியவர்க்கு மகனாகத்தோன்றி இளம்பருவத்திருந்தே அறிவும் ஆற்றலும் இறைமாட்சியும் பெற்றுத் தஞ்சை நீதிப்பெருமன்றத்தின் வழக்கறிஞர்களுள் ஒருவராக, சு. நடேசபிள்ளை. B.A.,B.L., என்ற பெயருடன், 1920-ஆம் ஆண்டுக்குள் சிறப்புற்றார்கள். அந்நாளில் இந்தியநாட்டுச் சென்னை மாநில அரசியலில் தன் உரிமை விரும்பி எழுந்த கிளர்ச்சிக்குத் துணைநின்ற நீதிக்கட்சி அறிவும் திறனும் கொண்ட தமிழ்மக்களைத் தன்பாலீர்த்தது. அதுபோது தஞ்சைமாவட்டத்தின் சிறந்துள்ள நீதிக்கட்சித் தலைவர்களின் ஆதரவில், கருந்திட்டைக்குடியில், தஞ்சைத் திராவிட இளைஞர்கழகம் என்ற நிறுவனம் தோன்றித் தஞ்சைத் திராவிட இளைஞர்கள் கல்வித்துறை தொழிற்றுறை, அரசியற்றுறை ஆகியவற்றில் முன்னேறிச்செல்ல ஊக்கமுட்டிவந்தது. அத்தஞ்சைத் திராவிட இளைஞர் கழகத்தின் முதல் தலைவராக விளங்கியவர்கள் நம் சு. நடேசபிள்ளை யாவார்கள். சு. நடேசபிள்ளை, தமிழிலும் ஆங்கிலத்திலும் மிக அழகாகவும் தெளிவாகவும் விரிவுரையாற்றிப் பலராலும் பாராட்டுப் பெற்று விளங்கினார். வழக்கறிஞர்

தொழிலாலும் பொது வாழ்வாலும் புகழ்வாயிலிருந்த சு. நடேசபிள்ளை B.A.,B.L., இன் தமிழ்ப்பண்பு நிறைந்திருந் தமைகண்ட யாழ்ப்பாணம். வீரத்திரு. பொன். இராம நாதன், அவர் நெறியால் உளங்கவரப்பெற்றார். தனக்குப் பின் சு. நடேசபிள்ளையையே வாரிசாக எண்ணினார். எனவே, சு. நடேசபிள்ளை யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச் செல்லப் பெற்று, வீரத்திரு. பொன். இராமநாதன் மேற்கொண்டிருந்த கல்விப் பெருநிலையங்கள் யாவற்றின் பொறுப்பையும் ஏற்க வேண்டியவராயினார்.

யாழ்ப்பாணம் சென்றபின்னர். சு. நடேசன். மேனாடுகள் பலவற்றுக்கும் சென்று பல பேரறிஞர்கள் நட்பினைக்கொண் டிருந்தார். இலங்கையரசுக்கும் தமிழ்ப்பொதுவுலகத்துக்கும் டாக்டர். சு. நடேசன் செய்த பணிகள் பலப்பலவாகும். நம் கரந்தைத் தமிழ்ச்சங்கப் பெருந்தலைவர்-தமிழவேள் அவர்கள், சங்கத்தின் இருபத்தெட்டாவது ஆண்டுவிழாத் தலைவராக (19ல் 20-8-1939) இவரைத் தேர்ந்தமையைக்கொண்டு இவர் மாட்டுத் தமிழவேள் கொண்டுள்ள நன்மதிப்புப் புலனாகும். மற்றும் தமிழகத்தின், பல்துறைகளிலும் அவ்வப்போது பங்கு பெற்றிருந்த சு. நடேசன் அவர்கள், சைவசித்தாந்த சமாச ஆண்டுவிழா, தமிழிசைவிழா போன்ற தமிழ்வளங்காணுந் துறைகளிற்றலைமை தாங்கிப் பொன்னுரை வழங்கிய செல்வ ராவர்.

பேரறிஞர். சு. நடேசன் B.A.,B.L., 'ஞாயிறு' என்னும் தமிழ்த்திங்கள் இதழின் ஆசிரியராகவும், 'சகுந்தலைவெண்பா' என்ற நூலாசிரியராகவும், அறிதுயிற்காட்சியின் முப்பகுதி கள் எனும் பொருள்படும் 'தரிசனத்திரயம் என ஞானநூலின் பதிப்பாசிரியராகவும், நூற்றுக்கணக்கான சிறப்பியல் கட்டு ரைகள், சிறு வெளியீடுகளில் நல்லாசிரியராகவும் திகழ்ந்தார். தமிழகத்தின் புறத்திருந்து தமிழரின் நல்வாழ்வுக்குத் தொண் டாற்றிய ஒரு தனிப்பெருந் தமிழனின் பிரிவினால் தமிழ்மக்கள் நல்வினை இழந்தவராயினோம். பேரறிஞர். சு. நடேசனின் இன்னுயிர், அமைதி நன்னிலை பெற்று ஒளிர்வதாகுக.

நூற்றாண்டுநிறைவுபெற்றதமிழ்ச் சைவப்பேரறிஞர்,

ஜெ. எம். நல்லசாமிபிள்ளை. B. A., B. L.,

தமிழகத்தின் தனித்த சிறப்பியல்களை வெளியுலகங் காணுமாறு முயல்கின்ற அறிஞர்களுள், 1920–ஆம் ஆண்டு ஆகஸ்டு. பதினோராம்நாள், தமது ஐம்பத்தாறாவது அகவையில் உயிர்நீத்த ஜெ. எம். நல்லசாமிப்பிள்ளை. B.A.,B.L., முன் அணியில் நின்றவராவர். அவரது நூற்றாண்டுப் பிறப்பு நாள். 24-11-64ல் வந்தமை முன்னிட்டு, அவரது நினைவாகச் சில கருதுவதன் பொருட்டே இச் சிற்றுரையாகும்.

திருச்சிராப்பள்ளியில் வேளாண் மரபில், சைவசமயவாழ்வில் சிறந்திருந்த குமாரசாமிப்பிள்ளை பெயரனாக, மாணிக்கம் பிள்ளைக்கும் செல்லத்தம்மையார்க்கும் மகனாக, 1864–ல் நவம்பர் 24 ஆம் நாள் பிறந்த ஆண்மகவு, பிற்காலத்தில் சைவத்தின் மன்னாதிமன்னன்' எனச் சிறப்பெய்திய ஜெ. எம். நல்லசாமிப்பிள்ளை என்னும் தமிழும் ஆங்கிலமும் தேர்ந்த புலவர் ஆவர். இவரது குடும்பத்தினர் கல்வியறிவும் சைவப்பெருநெறியும் மேற்கொண்ட மரபினராகலான் இளமையிலேயே நல்லசாமி, தேவார, திருவாசக, திருவிசைப்பா போன்ற தெய்வப்பனுவல்களை இசையுடன் பயின்று பாடுபவராகியும், சிவஞான போதம், திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞான சித்தியார் ஆகிய நூல்களிற் பற்றுடன் பயில்பவராகியும் விளங்கினர். தனது பத்தொன்பதாம் யாண்டளவிலேயே ஆங்கில இளம் புலவர் பட்டம் பெற்ற நல்லசாமி, பிறகு ஐந்தாண்டுகளுக்குள் சட்டம் பயின்றும் வீரத்திரு. சுப்பிரமணிஐயர் என்ற உயர்நீதி மன்ற வழக்கறிஞரிடம் தொழிற்பயிற்சி பெற்றும், மாவட்டத்தின் அரசியல் நீதிபதி (முனிசீப்) ஆகும் தகுதிபெற்று, இருபதாண்டுகள் இப்பணியிலிருந்தார். பின்னர் மதுரை நகராட்சி உறுப்பினராகவும், சைவசித்தாந்த சபையின் தலைவராகவும், விரிவுரையாளராகவும், சமயத்துறை விளக்குநராகவும் திகழ்ந்து, மேனாட்டறிஞர்களும் பிறரும் தமிழ்மொழியிலுள்ள சைவசித்தாந்த வுண்மைகளைத் தெளிவுற அறியும் பொருட்டு ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு நூல்களாக வெளியிட்டு- இங்கிலாந்து, செர்மனி, பிரான்சு முதலிய நாட்டறிஞர்கள் சைவசித்தாந்த மணத்தை நுகருமாறு செய்தார். மெய்கண்டார், அருள்நந்தி, உய்யவந்ததேவர், உமாபதிசிவம் ஆகியவரது நூல்களை விளக்கமாக ஆங்கிலப்பெயர்ப்பு நூல்

களாக்கி உதவினர். மற்றும் தம்போன்ற பேரறிஞர்களின் சமயக்கருத்துக்கள் வெளிவருமாறு, "சித்தாந்த தீபிகை" என்ற "உண்மைஒளி"-என்ற பெயரில் ஆங்கிலத்திங்கள் இதழ் தோற்றுவித்து 1897 முதல் பதினைன்கு ஆண்டுகள் நடத்திவந்தார்கள். அமெரிக்காவிலிருந்து தாய்நாடு திரும்பியிருந்த சுவாமி விவேகாந்த அடிகளுடன் தொடர்பு கொண்டு, சைவசித்தாந்தக் கருத்துக்களில் அடிகளார் உளம்பற்றுமாறு பிள்ளையவர்கள் முயன்று வந்தபோது, அடிகளார் திடுமென உலக வாழ்வு நீத்தமையால், அடிகளாரின் ஆதரவினை அறிய முடியாமல் போயிற்று.

அந்நாளின் பேரறிஞர்களாகிய, டாக்டர். போப்பையர் சைவசித்தாந்தப் பெருங்கடல் (-சூளை-) சோமசுந்தர நாயகர்; (பூவை) கலியாணசுந்தர முதலியார்; (பேராசிரியர்) பெ.சுந்தரம் பிள்ளை; (முதுபெரும் புலவர்) உ. வே. சாமிநாதையர்; (மகா வித்துவான்) ரா. இராகவையங்கார்; பாண்டித்துரைத்தேவர், மறைமலையடிகளார்; (திருப்புலிசை) ஞானியாரடிகள்; பண்டித மணி-கதிரேசச் செட்டியார்; இரமண சாத்திரியார், (தூத்துக்குடி) சிவகுருநாதப்பிள்ளை போன்ற சமயவுண்மைகளில் திளைத்த நல்லறிஞர்களின் பாராட்டுகள் பலப்பல பெற்றோங்கியவர் ஜெ. எம். நல்லசாமிப் பிள்ளையவர்களாவார்.

சைவசமயமும் தமிழ்ப்பண்பும் ஓங்குமாறு, தமிழகத்தின் அகத்தும் புறத்தும், கட்டுரைகளாலும் நூல்களாலும் மொழி பெயர்ப்புகளாலும் பொன்னுரைகளாலும் தொண்டுபுரிந்த பெரியாராகிய பிள்ளையவர்கள் இந்நாளில் சைவஉலகம் பெற்றுள்ள உயர்நிலைக்கு முன்னோடியாகித் தன் வாழ்வை அதன் பொருட்டே ஈந்த பெருமானகிப் பொன்றாப்புகழ் எய்தியவராவர் என்பது மறக்கற் பாலதன்று. ஜெ. எம். நல்லசாமிப் பிள்ளையவர்களின் புகழுடல் என்றும் உலகின் எம்மருங்கும் நின்று நிலவுக.

சென்ற இதழின் தொடர்ச்சி

புகார் முதல் வஞ்சி வரை

சி. கோவிந்தராசன்

இவ்வாருக், புகார்த் துறைமுதல் திருவெண்காடு திருத்துருத்தி, இடைமருதூர், வரையில் காவிரியின் போக்கில் பழைய வடிவைக் காணவியலாத செய்திகளும் சூழலுமாகவே அமைந்திருக்கின்றன. இம்மாற்றம் கி. பி. ஒன்பதாம் நூற்ருண்டின் இறுதியிலோ அன்றி பத்தாம் நூற்ருண்டின் தொடக்கத்திலோ ஏற்பட்டிருக்க வேண்டுமென்பது முதல் பராந்தகனுடைய கல்வெட்டுச் செய்தியால் நன்கு அறிய முடிகின்றது.

தமிழக வரலாற்றில், பிற்காலச் சோழரின் வரலாற்றமைப் பிற்குரிய சான்றுகளுள் ஒன்ருகக் கிடைத்துள்ள தமிழ் கல்வெட்டுகளில், ஒருசில கல்வெட்டுகளில் காணப்படும் செய்திகளைக் கொண்டே காவிரியின் போக்கு பல காலங்களில் பல்வேறுபட்ட நிலையில் மாற்றமடைந்துள்ளதைக் கூறியுளேன். இதனேடு, சோழநாட்டில் காவிரியாறு செல்லும் நிலச்சுழலும் திருப்பதிய ஆசிரியர்கள் காவிரிக்கரைத் தலங்களைப்பற்றிக் கூறியுள்ள சான்றுகளும் ஓரளவு இவ்வுண்மைக்குரிய ஆதரவாகவும் அமைந்துள்ளன. மற்றும், சோழநாட்டில் காவிரியின் வடகரைத் தலமாகும் வட குரங்காடு துறைக்குக் கிழக்கே காவிரியினின்றும் வடக்குப்புறமாகப் பிரிந்து, வடகரையைச் சார்ந்தும் நெகிழ்ந்து பிரிந்தும் கிழக்கு நோக்கிற் சென்று சீர்காழி வட்டத்தில் கடலில் கலக்கும் 'பழவாறு' என்று பெயர் கூறப்பெறும் ஆறு, பழைய காவிரியின் இயல்பை ஒவ்வோரிடத்தில் அமைத்துக்காட்டுவதாக இருப்பதுடன் பெயரைக் கொண்டும் சிந்திக்க வேண்டிய சூழ்நிலை உண்டாக்கி நிற்கின்றது.

இவ்வளவில், எல்லையிட்டுக் கூறவியலாத காலத்தில் தமிழகத்திற்கு மேற்கு வரம்பாகும் பெருமலையின் வடமுனைப்பகுதிகளுள் ஒன்ருகும் குடகு மலையில் தோன்றி, அருவியாகத் தொடர்ந்து பேராருகி கிழக்கிட்டு நடந்து—பலகாலிட்டு சோணுட்டில் வளம்பெருக்கி—தன்வளமிழந்த வள்ளல்போல கிழக்கே வங்கக்கடலில் கலக்கும் பெருமையினை உடையதும், 'மலைத்தலைய கடற் காவிரி' என்று பட்டினப்பாலை எல்லையிட்டுக் காட்டுதற்குரியதுமான காவிரியாறு சோழநாட்டுள் மெல்லென நடக்குங்கால், சென்ற காலங்களில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினுல் தன்னையும் சூழலையும் மாற்றியமைத்துக் கொண்டு நிற்கும் நிலையினை எடுத்துக் காட்டியதற்குரிய இன்றியமையாமை யாதெனில், சரித்

திர காலத்திற்குரிய சான்றுகளைக்கொண்டு அதற்கு முற்பட்ட காலங்களிலும் காவிரியில் பருவகாலங்களில் வெள்ளமும், அதனால் அழிவுகளும் ஏற்பட்டிருக்க வேண்டுமென்பதை வரலாற்றறிவோடு எண்ணித்துணிந்து அறியலாகு மென்பதேயாம்.

எனவே, கண்ணகி கோவலன் ஆகிய இருவரும் கவுந்தியடிகளுடன் மேற்கொண்ட காவிரியின் வடகரை வழியை சிலம்புகூறும் செய்தியைக்கொண்டு பழம்பொருள் ஆராய்ச்சியின் வழியே திட்டப்படுத்தியறிய மிக்க முயற்சி வேண்டுமென்பதைப் புலப்படுத்த வேண்டியதாகின்றது. இதனால், காவிரியின் பழைய நெறி முழுவதும் மாறியிருக்கின்ற தென்பதல்ல. சோழநாட்டெல்லையுள் மண்வளம் மிக்க பகுதியில் ஆறு ஆங்காங்கே மாறியும், மாற்றப்பட்டும் இருக்கின்றதென்பதை உணர்த்துவதேயாகும். இவ்வாறு உரைக்கப்பெறும் வரலாற்றின் இயல்பினையும் பயனையும் ஓரெடுத்துக் காட்டால் புலப்படுத்தலாகும்.

1959-ஆம் ஆண்டு, தஞ்சை வளநாட்டில், காவிரியின் தென்புறக் கிளையாறுகளில் ஒன்றாகும் குடமுருட்டியாற்றின் காலாகப் பிரிந்தோடும் திருமலைராயன் ஆற்றில், பாபநாசம் என்னும் ஊரிலிருந்து காவிரியின் வடகரையிலுள்ள கபித்தலம் என்னும் ஊருக்கு, குறுக்குப்பாதையாக பாலம் அமைக்க ஆற்றின் நடுவில் உரைக்கிணறுகள் இறக்கப்பட்டன. அப்பொழுது நிலவகட்டில் கருங்கற் சுவர்ப்பகுதிகள் தடையாக நின்றதால், அவற்றை அகழ்ந்து வெளியில் எடுத்தனர். சிற்பவேலைப்பாடுடைய அக்கருங்கற்பகுதிகளில் கல்லெழுத்துக்கள் வெட்டப்பட்டிருந்தன. கல்வெட்டுச் செய்தியைக் கொண்டு சுந்தரசோழ விண்ணகரம் என்ற திருமால் கோயில் ஆற்றின் அடியில் அழிந்து நின்ற நிலை விளங்கலாயிற்று.[1] பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சோழ நாட்டை யாண்ட சுந்தர சோழனால் உண்டாக்கப்பட்ட இக்கோயிலில், கி. பி. 12-ஆம் நூற்றாண்டில் உண்டான கல்வெட்டுகள் இருந்தன. இக்காலத்திற்குப் பின்னரே ஆற்றழிவிற்குள்ளாகி இவ்விண்ணகரம் அடியில் புதையுண்டு மறைந்திருக்கவேண்டும். இவ்வாறு ஏற்பட்ட அழிவு நிலைமைக்கு, தலைமையாறாகிய காவிரியின் வெள்ளப்பெருக்கே காரணமாகு மென்பது வெளிப்படையாகும்.

திருமலைராயன் ஆற்றின் நடுவில், புதைபொருளாகக் கிடைத்த இக் கல்வெட்டுச் செய்திகட்கு முன்னர், சுந்தர சோழனால் உண்டாக்கப்பட்ட விண்ணகரம் பற்றிய செய்தியையும், அழிவையும், வரலாற்று நூல்கள் உரைத்தில. இவ்

* 1. 12—3—59-ல் கண்டுபிடிக்கப்பட்டு, தமிழ் நாளிதழ்களில் வெளியிடப்பட்ட செய்தியாகும்.

வாறே மறைந்துபோன பழமையான சின்னங்கள் காலப் போக்கில், இயல்பாகவும்; முயற்சியின் பயனாகவும் கிடைத்தற்காம். அப்பொழுதே வளரும் தமிழக வரலாறு ஓருவாறு நிறைவு பெறும்.

ஏரகமும் திருவரங்கமும்.

காவிரிப்பூம் பட்டினத்திலிருந்த இல்லத்திலிருந்து புறப்பட்ட கோவலன் கண்ணகி இருவரும் நடந்ததாகக் குறிப்பிடப்பெறும் வழியின் தொடக்கத்திலேயே, இளங்கோவடிகள் மேற்கொண்டே சமயப்பொது நோக்காகும் வித்தும் முளைத்து வளரத் தொடங்குகின்றது. ஆயினும் அடிகள் தாம் மேற்கொண்ட அருக சமயத்தை, கோவலன கண்ணகியிடத்தும், கவுந்தியடிகள் வாயிலாகவும், பிறவாறும் சமயக் குறிப்புடன் கண்ணேட்டமிட்டுச் செல்லும் புலமைசான்ற நுட்பம் இலக்கியம் முழுவதும் இயைந்து மெருகிட்டு நிற்பதை ஆங்காங்கே கண்டு மகிழ்தற்காம்.

நகரின் இடைப்பட்ட பகுதியைக் கடக்க முற்பட்ட இருவரும் முதற்கண், அணிகில ரரவின் அறிதுயி லமர்ந்த மணிவண்ணன் கோட்டம் வளஞ் செயாக் கழித்து, அடுத்து நின்ற பௌத்த விகாரமாகிய இந்திர விகாரம் ஏழுடன் போகி, அப்பால் அமைந்த அருகத்தானமாகிய இலகொளிச் சிலாதலந் தொழுது வலங்கொண்டு, காவிரிவாயிற் கடைமுகம் கழித்து குடதிசை கொண்டு, வடபெருங் கோட்டு மலர்ப் பொழில் நுழைந்து, கவுந்திப்பள்ளியை யடைந்து, அப்பெரியாருடன் வழிக்கொண்டனர் என்பதே சிலம்புவழிக் கொண்ட செய்தியின் தொடக்கப்பகுதியாகும். இவ்வளவில், கோவலன் கண்ணகி இருவரும், திருமாலை-வலஞ்செய்து கழித்து, புத்த விகாரம்—ஏழுடன் போகி, அருகன் சிலாதலம்—தொழுது வலங்கொண்டனர்; என்ற அளவில் அடிகள் மேற்கொண்ட சமயப் பொதுநோக்கு ஏற்ற அளவில் இடரில்லாமல் மிளிருமிடத்தினை நன்கு அறிஞர் அறிவர். இத்துறையினை விடுத்து யான் மேற்கொண்ட காவிரிக்கரை வழியினைத் தொடருகின்றேன்.

சோழநாட்டிலிருந்து வடகரைப் பகுதியாகத் தொடரும் வழி, ஊர் இடையிட்ட நாடு உடன் கொண்ட இயல்புடைய தென்பதை இளங்கோ பொதுவாகக் கூறியிருப்பதுடன் அதன் முதற்பகுதி வளமிக்க மருத நிலப்பாங்கு நிறைந்த தென்பதை விளக்கமாகவே குறித்திருக்கின்ருர். இவ்வழியில் வளமுடன் நிறைந்துள்ள மருத நிலப்பாங்கினை யாரும் எளிதில் அறிதற்காம். ஆனல், காவிரியாற்றின் பழைய நெறியினை அறிய வியலாமைகதுரிய சான்றுகளுள் சிலவற்றை மேலே கண்டோம். தொடர்ந்து மேற்கு நோக்கி காவிரியின் வடகரை வழியே செல்லுவோமானல் இடையே, அரும்பதவுரைகாரர் வெண்குன்றே சாமிமலை என்று விளக்கம் தருவதாகிய

முருகனுக்குரிய செய்குன்றக் கோட்டத்தினைக் காணலாகும். கண்ணகி கோவலன் வழிக்கொண்ட பகுதியில் நிற்கும் பழம் பெருமையோடு கூடிய வெண்குன்றினை இருவரும் தொலைவிற் கண்டதாகவோ, அல்லது கடந்து சென்றதாகவோ அடிகள் குறித்திருப்பாரல்லவா? குன்றக் குரவையுள் குறிப்பிடும் பகுதிக்குரிய உரையைக் கொண்டல்லவா . சுவாமிமலையை புரிந்து கொள்ளுகிறோம். பொதுநோக்குடன் வழியிடைப் பட்ட நல்லிடங்களைப் புகலும் அடிகள் வெண்குன்றைக் குறிக்காது விட்டிருப்பாரா? ஒருகால், காவிரியின் பழைய நிலை இத்தலத்திற்கு வடபால் ஓடியதாக இருந்திருக்கலாமோ! என்ற குழப்பங்கள் தோன்றலாம். வெண்குன்றே ஏரகம் என்றும் சிலர் அறுதியிட்டுக் கூறுவர்.[1] முருகனுக்குரிய சுவாமிமலை பழமையானது என்பதில் ஐயமில்லை. மேல், காவிரியின் வடகரை வழிக்கு ஓர் எல்லை காட்டி விடுகின்றார் அடிகள்

அப்பகுதி, அரங்கமாகத் தரை முகடிட்டுத் தொடரும் ஆற்றிடைக் குறையின் சிறந்த தலைப்பேயாகும். திருவரங்கத்திற்குப் பத்துக்கல் மேற்கே, திருப்பராய்த்துறை குணசீலம் என்னும் தலங்களுக்கிடையே காவிரியினின்றும் கொள்ளிடம் என்னும் பேராறு பிரிகின்றது. பிரிவுக்கு இடையே வண்டல் படிந்து வளமுடன் மேடிட்டுத் தொடர்ந்து நீண்ட கூர்முனை நிலத்துண்டத்தின் அகலிடத்தினையே அரங்கமென்று அழைத்துள்ளனர். ஈண்டு சீரங்கம் பழமை மிக்கதாய் விளங்கி வருகின்றது. காவிரிப்பூம் பட்டினத்திலேயே கண்ணகி கோவலன் இருவரும் முதற்கண் திருமால் கோயிலை வலஞ் செய்து வந்ததாகக் கூறிய இளங்கோவடிகள் இங்கு திருவரங்கம் பெருமைமிக்கப் பழமையுடைய தலமாக இருப்பதற்குரிய குறிப்பினைத் தாராது கண்ணகி கோவலன் வடகரையிலின்றும் காவிரியைக் கடந்து நேர் எதிரே தென்கரையில் அமைந்துள்ள உறையூரை அடைந்தனர் என்ற செய்தியை முடித்துக் காட்டுகின்றார்.

அரங்கத்துள் ;

பட்டினப்பாக்கத்தில் அமைக்கப்பட்டிருந்த சிலாவட்டத்தின்கண் எழுந்தருளி, அருகதேவனால் அருளப் பெற்ற தருமவொழுக்கத்தை யாவரும் கேட்கும்படி அருளிச் செய்யும் சமணமுனிவர், அரங்கத்துள் அமைந்த விண்ணவர் உறைதற்கொத்த அழகிய பக்கமொன்றில் வந்திருந்தனர். அவர் வந்தமையைக் கண்டறிந்த கவுந்தியடிகளுடனே கோவலன் கண்ணகி ஆகிய இருவரும் சென்று அவரடியிலே தலையுற வீழ்ந்து வணங்கினர். முக்கால முணர்ந்த முனிவரும் வணங்கியவர்க்கு வரும் துன்பத்திற்குத் தான் வருந்தானாகி, தவச்சிறப்பினையுடைய கவுந்தியடிக்கு, 'யாவரானும் ஒழிக்க ஒழி

1. ஏரகம் மலைநாட்டகத்ததொரு திருப்பதி என்பர் நச்சினார்க்கினியர்.

யாதாய் நுகர்விக்க வந்துநிற்கின்ற தீவினையைப் பாராய்' என்று குறிப்பாலுணர்த்தி, தருமோபதேசமும் செய்து போயினர்! பின்னரே மூவரும் அரங்கத்தினின்றும் காவிரி யாற்றைப் நீரணிமாடத்தின் வழியே கடந்து தென்கரையை அடைந்தனர். என்ற அளவில் அரங்கத்துள் நிகழ்ந்த நிகழ்ச்சி யினைச் சிலப்பதிகாரம் அளவிட்டுக் கூறுகின்றது.

கண்ணகி கோவலன் கவுந்தியடிகள் ஆகிய மூவரும் அரங்கமெனும் ஆற்றிடைக்குறையில் ஏதோவொரு பகுதியி னின்றும் காவிரியைக்கடந்து தென்கரையை அடைந்தன ரென்று கொள்வதற்கில்லை. கிழக்கு மேற்காக அமைந்துள்ள அரங்கத்தின் மேற்குப் பகுதியில் திருவரங்கமெனும் திருமால் கோயில் தலைப்பிட்டு நிற்க, கிழக்குப் பகுதியில் எல்லையாக ஆனைக்கா என்னும் சிவன்கோயில் அமைந்து நிற்கின்றது. இவை இரண்டு தலங்களும் சிலப்பதிகார காலத்திற்கும் முற் பட்ட பழமையுடைய தென்பதை எத்தகையாரும் அறிவர். இப்பகுதிகளுள், காவிரியைக் கடந்து, நியமத் தென்கரை எய்தி, ஓர் பூம்பொழிலில் தங்கிய பின்னர் உறையூருள் புகுந் தனர் என்றே சிலம்பு சென்ற வழியை இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார். இதனை,

"காரணி பூம்பொழில் காவிரிப் பேர்யாற்று
நீரணி மாடத்து நெருந்துறை போகி,
மாதரும் கணவனும் மாதவத் தாட்டியும்
தீதுதீர் நியமத் தென்கரை எய்தி,
போதுசூழ் கிடக்கையோர் பூம்பொழில் இருந்து—
முரஞ்செவி வாரணம் முன்சமம் முருக்கிய
புறஞ்சிறை வாரணம் புக்கனர்"

என்னும், நாடுகாண் காதைப் பகுதிகள் நன்கு கூறுகின்றன.

சிலப்பதிகார நிகழ்ச்சிக் காலம் கி. பி. முதல் நூற்றாண் டென்று ஆராய்ச்சியாளர் அமைத்துக் கொண்டுள்ளனர். மாநில வளாக வளர்ச்சி யாண்டில் இன்றுவரை இவ்விடை யிட்ட காலம் இரண்டாயிரம் ஆண்டுகளென்று அளவிடுவ தாயினும், இக்கால அளவு ஒருபெரிய இடையீடாகாது. மாநிலம்கொண்ட சுவடுகளுள் மலை, மலைசார்ந்த இடம், அவற் றிடைப்படும் யாறு ஆகிய இயற்கைப் பகுதிகள் ஓரளவே இடம்பெயரவும் மாறுபடவும் நிலையில் திரியவும் கூடும். மண் திணிந்த நிலமாயின் அவற்றிடையே ஓடும் ஆற்றழிவுக் குள்ளாகும் பகுதிகள், சிதைந்து நிலவகட்டில் மறைதலும் இயல்பென்பதை முன்னர் ஓரெடுத்துக்காட்டால் கூறியுள் ளேன். அரங்கமென்னும் ஆற்றிடைக் குறையமைப்பிற்குட் தலைப்பாக நிற்கும் கூர்முனைத் திட்டினின்றும் கொள்ளிட

மென்னும் நிறைபுனலாற்றைப் பிரித்து இணைந்த பாங்கில் கிழக்கு நோக்கி இழிந்தோடிய காவிரி, பத்துக்கல் அளவில் மீட்டும் காவிட்டு அரங்கத்திற்கு எல்லையாக கொள்ளிடத்தை இணைக்கும் அமைப்பில் இன்றும் மாறுபாடில்லை. இதனை, 'கூடுநீர் அரங்கம்' என்று திருமழிசையாரும், 'காவிரி நடுவு பாட்டு பொங்குநீர் பரந்து பாயும் பூம்பொழில் அரங்கம்' என்று தொண்டரடிப் பொடியாரும் குறித்துள்ளார்கள்.

அரங்கத்திற்குத் தெற்கும் உறையூர்க்கு வடக்குமாக இடையிட்டுச் சென்ற காவிரியின் போக்கில் பழைய நீர் பரந்த நிலை சுருங்கிக்குறுகி ஓடுவதாகவுள்ளதேதவிர இடம் மாற்றியறிய இயல்பில்லை. இங்கே, காவிரியின் தென்கரையிலுள்ள சிராமலை இடம்பெயராத இயற்கைப் படைப்பு. சிராமலைக்கு மேற்கே, உறையூர் அமைந்து நெடிதாகப் படர்ந்திருந்த தென்பது மாற்றுதற்கியலாத குறிப்பாகும். இதனால் உறையூருக்கு எதிரிட்ட வடகரையில் பூம்பொழில்சூழ திருவரங்கம் அமைந்திருப்பது இன்றும் நெறிமாறவில்லை. இதனை உறையூரில் வாழ்ந்த திருப்பாணாழ்வார், காவிரிக்கரையிலிருந்தே எதிர்கரையிலுள்ள அரங்கநாதன் கோயில் விமானத்தைக் கண்டு யாழிசை கூட்டி வழிப்பட்ட செய்தியும் ஓரளவு ஒப்பிட்டறியத் தகுந்ததேயாகும்.

இளங்கோவடிகள் அறவழியில் ஏற்றுக்கூறும் சமயப் பொதுநோக்கினை ஈண்டு ஆராயுங்கால், அரங்கப் பகுதியுள் வந்துற்ற அருகதேவரைப் பற்றிய செய்தியை கோவலன் கண்ணகி வரலாற்றோடு இணைத்து உரைத்தவர், ஓரளவாவது திருவரங்கத்தைப் பற்றிய குறிப்பினையும் அங்குவந்தடைந்த கோவலன் கண்ணகி கண்டதாகவோ, பொதுவாகவோ, பிறவாறோ கூறியிருக்க வேண்டுமென்பதோர் நுட்பம் தோன்றுவது சிந்திப்பார்க்கு உரியதேயாகும். குறிப்பிட வெண்டிய இடத்தில் விடப்பெற்ற திருவரங்கம் பிற வைணவத் தலங்களுடன் உறையூர்க்குத் தெற்கே அமைந்திருந்த சோலையில் இளைப்பாறிய கோவலனிடம், மேலை மலைக்கு அப்பாலுள்ள மாங்காடு என்னும் ஊரிலிருந்து யாத்திரையாகவந்த மறையவனால் விளக்கப் பெறுவதாக அடிகள் அமைத்துள்ளார்கள். சமயத்துறையில் இளங்கோவடிகள் வகுக்கும் இந்நிலையினை ஆராயின் மாங்காட்டு மறையவன் சிலப்பதிகாரகாலத்தில் விளங்கிய வைணவத்தலங்களை விளக்கும் உறுப்பினனாவும் முத்தமிழ்க் காப்பியமாகிய சிலம்பில் இடம்பெற்றுள்ள சதுரப்பாடு நன்கு விளங்குவதாகும்.

* பாட்டுச் சொல்லாட்சி

—புலவர். தி. நா. அறிவுஒளி—

பாட்டுக்கெனத் தனிச் சொல் உண்டா? இல்லை. உரைக்கும் பாட்டுக்கும் ஆளப்படும் சொற்கள் மொழிக்குரிய பொதுவானவையே யாகும். தொல்காப்பியர் 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்றார். எல்லாச் சொற்களுக்கும் ஒவ்வொரு பொருள்—கருத்து—உண்டு. ஆனால் புலவன், சொல்லைப் பாட்டுச் சொல்லாக ஆக்கும் போது அது தனியொளியும் தனியழகும், ஒள்ளிய உணர்வழுத்தமும் உடையதாகிறது. இதுவே பாட்டுச் சொல்லாட்சிக்கும், வெறுஞ் சொல்லுக்கும் உள்ள வேற்றுமை.

மின்னாற்றலைக் குறித்தகம்பி வாயிலாகக் குறித்தகுமிழ் விளக்கினுள் குறித்த முறையில்—அளவில்—செலுத்தினால் அவ்வாற்றல் ஒளி வீசிப் பொலிந்து இருளோட்டிப் பயன்படுகிறது. அதுபோல, சொல்லையும் புலவன் குறிப்பிட்ட சூழ்நிலையிலே குறிப்பிட்ட உணர்ச்சியாற்றலோடும், புலமைத் திறனோடும் யாப்புக்குமிழினுள் செலுத்தி இலக்கியத்திறனூட்டும் போது அச் சொல், பாட்டுச் சொல்லாய்ப் பொலிகிறது. அது தனியழகும் தனிப்பொருளாழமும், உணர்வாற்றலும் நீடிய வாழ்வும் பெறுகிறது.

'பாட்டு' பேசும் ஓவியம்; ஓவியம் பேசாத பாட்டு என சைமனடீசு (கி. மு.—?—467) என்ற அறிஞர் உரைத்தார். எனவே பாட்டு உரை ஓவியமாக விளங்கும் பெற்றியது. எண்ண உயிரும் உணர்ச்சியுடம்பும் மொழியுருவில் உருவாகிப் பாட்டாகச் சிறக்கிறது. இதனை நன்கு அவ்வையார் தம் புறநானூற்று 235 ஆம் பாடலில் விளக்குகின்றார்.

'அஞ்சொல் நுண்தேர்ச்சிச் செஞ் சொற் புலவர்' என்கிறார் அவர். 'புலவர்கள் அழகிய சொற்களை, நுண்மையாக ஆராய்ந்து தெளிந்து செஞ் சொற்றிறனோடு பாவடிப்பவர்கள்' என்ற உண்மை இத் தொடரால் நன்கு புலனாகும்.

தமிழின் சொல்வளம் அளவிடமுடியாதது. அதனாற்றான் குமரகுருபரர்,' 'தொடுக்கும் பழம்பாடற்றொடையின் பயனே!

---

* 12—1—1965 அன்று சென்னை ஒய். எம். சி. ஏ. பட்டிமன்றத்தில் ஆற்றிய உரைச் சுருக்கம்.

நறைபழுத்த துறைத் தீந்தமிழின் ஒழுகு நறுஞ் சுவையே! என்றும், 'நாடும் பொருட் சுவை சொற் சுவை தோய்தர நாற் கவியும் பாடும் பணி' என்றும், 'தூக்கும் பனுவற்றுறை தோய்ந்த கல்வியும் சொற்சுவை தோய் வாக்கும்' என்றும் சொல்லின் சுவையை விளக்கியுள்ளார். பாட்டு, பாவியம், உரை நூல் எதுவாயினும் அஃது சிறப்படைய இனிய சொல் லாட்சி அமையவேண்டுமென்பதை அவர், "பண்ணும் பரத மும் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும் யான் எண்ணும் பொழுது..." என்ற பாடலடியால் தெளிவாக்குகின்றார்.

ஒரு மொழியில் பல கோடி சொற்கள் இருக்கும். அவற் றுள் ஒரு புலவன் தான் கூறவந்த கருத்தை, உணர்த்த வேண்டிய உணர்வை முழுநிறையாற்றலோடு கூறுவதற்குரிய சொற்களை ஆய்ந்து தேர்ந்தெடுத்தே ஆள்கிறான். உணர் வினில் வல்லவர் புலவர். அவ்வுணர்வெழுச்சியால் தான் உயிரும் உணர்வும் கிளர்ச்சியும் கெழுமிய தீஞ்சுவைச் சொற் களைத் தேர்ந்தாள்கின்றனர்.

"பல்வகைத் தாதுவின் உயிர்க்கு உடற்போற் பல
சொல்லாற் பொருட்கு இடனாக உணர்வினில்
வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்" (நன்னூல்: 268.)

என நன்னூலார் நவின்றனர்.

புலவர்கள் உணர்வினில் வல்லவர் என்பதும், அவர்கள் தம் புலமையுணர்ச்சிப் பெருக்கை அழகோடு இணைந்து யாப்பு வழிப்படுத்தித் தேர்ந்த வெல்லுஞ் சொல்லால் பொருட்சிறப்போடு பாட்டைப் படைக்கின்றனர் என்பதும் இந் நூற்பாவால் தெளிவாகும்.

தமிழ்ப் பாட்டு என்றாலே இனிமை கனிந்த பாட்டு என்று யாவரும் நன்கறிவர். அப்பாக்களில் சொல்லாட்சியால் விளையும் சுவை எண்ணிலவாம். வள்ளுவர் பேசும் பேச்சில் கூட வெல்லுஞ் சொல்லையே பயன்படுத்த வேண்டும் எனக் கட்டளையிடுவர். அவ்வாறாயின் பாட்டிலும், இலக்கியத் திலும் எத்துணை சீரிய வெல்லுஞ் சொல்லாட்சி ஆளப்பட வேண்டும்! இக் கூற்றுக்கு வள்ளுவரின் தமிழ் மறையே தக்க சான்றிலக்கியமாக வுள்ளது.

ஒரு சொல்லைக் குறட்பாவின் முதலில் அமைப்பதற்கும், அதனை அடுத்து வருஞ் சீர்களாக அமைப்பதற்கும் ஆழ்ந்த கருத்து அமைந்திருக்கிறது. சொல் பெய்யப்படும் இடத்

தாலும் பாட்டின் கருத்துவளமும், உணர்வாற்றலும் நுண்பொருளமைதியும் சிறக்கிறது. இந் நுட்பத்தை ஒரு குறட்பாவால் ஆய்ந் தறிவோம்.

> "நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்; தீயொழுக்கம்
> என்றும் இடும்பை தரும்" (138)

என்ற குறளில் சொல்லமைந்த இடத்தால் அரும்பொருட் சுவைநயம் கிட்டுகிறது.

நல்லொழுக்கத்தால்தான் நன்றி (நன்மை) விளைகிறது எனப் பயனை முதலில் கூறி அதை விளைவிப்பதை (நல்லொழுக்கம்) பின்னாக (மூன்றாஞ் சீரில்) அமைந்துள்ளார். நல்லதைத் தரும் நல்லொழுக்கம் முதலிலேயே அமையாது, அவ்வொழுக்கத்தில் ஈடுபட ஈடுபடப் பின்னேதான் அது உருவாகி யமையும் என்பதால் 'நல்லொழுக்கம்' என்ற சொல் மூன்றாஞ் சீராக அமைந்துள்ளார். இது இக் குறட்பாவின் முதற் கருத்து.

இரண்டாம் கருத்து மற்றைய தொடரால் அறிவுறுத்தப் படுகிறது. 'தீயொழுக்கத்தால் எப்போதும் துன்பமே விளையும்' என்பதே இரண்டாம் கருத்து. தீயொழுக்கம் திடீரென எடுத்த எடுப்பிலேயே அமைந்துவிடக்கூடியது ஆகவே தீயொழுக்கம்' என்ற சொல்லை முதலில் அமைத்து, அதனால் விளையும் பயனை (துன்பம் விளைவதை) இறுதியில் சீராக வைத்தருளினார் ஞானப் புலவர்.

பலகாலம் உழைத்துப் பின்னடைவது நல்லொழுக்கம்

திடுமென உடனே வளர்ந்து விடுவது தீயொழுக்கம்;

இவ்விரு நுண்ணுண்மையை உணர்த்தவே இருகருத்துக்களை உணர்த்தும் இக் குறட்பாவில் நல்லொழுக்கம், தீயொழுக்கம் என்ற சொற்களை மூன்றாஞ் சீராகவும், நான்காஞ் சீராகவும் அமைத்தார். அது மட்டுமல்ல. நல்லொழுக்கத்துக்கு முதன்மை, தலைமை, முன்னிடம் தரவேண்டுமென்பதற்காக நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்' என்ற கருத்தை முன்னர்க் கூறிப், பின் தீயொழுக்கம் துன்பந்தருவதைப் பின்னர்க் கூறினார்.

வள்ளுவர் குறளமைத்த முறைப்படியே நாம் காணும் புது நயம், அரும் நுண் கருத்து கிடைக்கிறது. வேறு அமைப்

பில் இக் குறளை அமைத்திருப்பின் இத்தகைய பொருள் நுணுக்கங்கள் கிடைக்காது.

"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்; என்றும்

இடும்பை தரும் தீயொழுக் கம்"

எனவும் அக் குறளை இடம் மாற்றி அமைத்திருக்கலாமே.

அவர் முதற் கருத்தை அமைத்த சொல் முறைப்படி இரண்டாம் கருத்தையும் அமைக்க வேண்டுமென்றால் மேற் குறித்தவாறு தான் அமைக்க வேண்டும். இவ்வாறு சொல் லாட்சி செய்வதில் இலக்கியச் சிறப்போ, கலை நுட்பமோ, சொல்லாட்சியாற்றலோ எதுவுமில்லை. எனவே தமிழ்முதல்வர் இவ்வாறு சொல்லாட்சியைப் பாட்டில் இடமறிந்து ஆண்டு கருத்தூற்றாகப் பாட்டைப் பொலியச் செய்துள்ளார். நான் குறித்த மாற்றியமைக்கப்பட்ட முறையிலமைந்த சொல்லாட் சியை வள்ளுவர் தம் குறளில் அதே அதிகாரத்தில் ஆண் டுள்ளார் என்பதையும் நினைவுகூர வேண்டும். அப்போது தான் இக் குறளில் அவர்செய்த மாறுதலின் நுண்மையும் நயமும் தெளிவாகத் தெரியும்.

"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை—இழுக்கத்தின்

எய்துவர் எய்தாப் பழி." (137)

'ஒழுக்கம் முதலில் ஒருவனுக்கு அடையவேண்டும். அப் போதுதான் அவனுக்கு இறுதியில் மேன்மை கிட்டும்.' என முதற் கருத்தை முதல் மூன்று சீர்களில் கூறினார் வள்ளுவர். அடுத்த இரண்டாம் கருத்தில் ஒழுக்கமின்மையால் ஒருவன் பழியே அடைவான் என்றார். இக் குறளில் 'பழி'க்கு அடை மொழி கொடுத்துத் தன் சொல்லாட்சித்திறனை நிலை நாட்டி யுள்ளார். 'எய்தாப்பழி' என்ற தொடர் நம் எண்ணத்தைக் கிளறுவதாகும். இது வரை சான்றோர்கள் எவரும் அடை யாத கொடிய பழி நமக்குச் சேரும் எனப் பொருள் தருகிறது. இதுவரை நம்மை அடையாத பழி நமக்கு உறும் எனப் பொருள் தருகிறது. இவ்வாறு சொல்லமைப் பாலேயே பொருட் சிறப்பமைக்கு மாற்றல் சீரிய புலவராற்றலாம் என் பதைத் தெளிந்தோம்.

கதைகள் எழுதுவோர் திடுக்கென்று எதிர்பாராத முடிவு களை யமைத்துச் சுவைஞர் ஆர்வத்தைத் தூண்டி, திகைக்கு மாறு செய்து, மேன்மேலும் சுறுசுறுப் போடு முனைந்து படிக்

கத் தூண்டும் முறையை வள்ளுவர் தம் அருந் தமிழ் மறையில் சிறந்த நிலையில் பயன்படுத்தியுள்ளார்.

'பொறுமை யுள்ளவனிடம் ஆக்கம் போல' என்று கூறி நிறுத்துகிறார் வள்ளுவர். நாம் திகைக்கிறோம். அழுக்காறு டையவனிடம் செல்வம். இருக்குமா? வள்ளுவரா இப்படிக் கூறுகிறார்? ஆம். அடுத்த சொல்லைப் பார்த்தால் வள்ளுவர் சொல்லாட்சித் திறனில் சொக்கி வியப்போம்! சுவையில் திளைப்போம்! 'அழுக்காறு உடையான்கண் ஆக்கம் போன்று இல்லை,''—

'அழுக்காறு உடையவனிடம் ஆக்கம் இல்லாதது போல' எனப்பொருள் அமைந்துள்ளார். அடுத்த அடி அருமையான அடி! ஆம்.

'ஒழுக்கமிலான் கண் உயர்வு. (இல்லை.)' என முடிக்கிறார். இப்போதுதான் இக் குறளின் நடையழகும், நயத்தின் நளியழகும் எத்துணை புலமை பேதைமை சான்றதெனை அறிகிறோம்.

'அழுக்காறு உடையான்கண் ஆக்கம் போன்று இல்லை
ஒழுக்கமிலான்கண் உயர்வு'' ( )

என்ற குறளின் பாட்டுச் சொல் இடம் நோக்கிப் பொருணயங் காட்டும் அருமைபோல் பல குறட்பாக்கள் ஆய்வின்பம் நல்குகின்றன.

வாழ்வு, ஆகிக் கொண்டே இருப்பது, என்றும் அஃதற்றது இறப்பு என்றும் நுண்ணிய பொருளமைதியை அவ்வையார் (புறம் 91 ஆம்) பாவில் தெளிவிக்கிறார்:

''ஆதல் நின்னகத் தடக்கிச்
சாதல் நீங்க எமக் கீத்தனையே''

'ஆக்கம் நல்குவது வாழ்வு, ஆக்கம் நல்காதது சாவு' என்னுந் தெளிவு சொல்லாட்சிச் சிறப்பால் உருவானதன்றோ?

'பால் மாறல்' என்ற சொல்லாட்சி இன்றும் பேச்சு வழக்கில் உள்ளது. 'அவன் அந்த வேலையைச் செய்யப் பால்

மாறினான்' என்பர். இதன் பொருளை எத்துணை பேர் தெள்ளத் தெளிய அறிவர்? இதன் பண்டை வழக்கு எத்தகையது? என அறியவேண்டும். பால் என்றதும், ஆவின்பால் தாய்ப்பால் சிலர்க்கு நினைவில் உறும். ஆண் பால், பெண் பால், பலர் பால் முதலிய இலக்கணப் பால் பாகுபாடு சிலர்க்கு நினைவில் தோன்றும். குறளில் அறத்துப் பால், பொருட் பால், காமத்துப் பால் என்ற அமைப்பும் 'முப் பால்' பெயரும் நினைவில் தோன்றும், நாலடியாரிலும் இவ் வமைப் புள்ளது தொல்காப்பியத்தில் இச் சொல் பயில்கிறது. எட்டுத் தொகை, பத்துப் பாட்டில் இச் சொல் (பால்) ஆளப் பட்டுள்ளது. புறப் பொருள் வெண்பா மாலையிலும் இச் சொல் பயில்கிறது.

> "அரிபாய் உண்கண் ஆயிழைப் புணர்ந்தோன்
> பரிவகல் உள்ளமொடு பால்வாழ்த் தின்று"
>
> (புற: வெண்பாமாலை)
>
> (பால்முல்லை—பொதுவியற் படலம்: கொளு: 42)

என்ற கொளுவும்,

> "திங்கள் விளங்கும் திகழ்ந் திலங்கு பேரொளி
> அங்கண் விசும்பின் அகத்துறைக—செங்கண்
> குயிலனைய தேமொழிக்கூர் எயிற்றுச் செவ்வாய்ப்
> பயில்வளையை நல்கிய பால்" (புற வெ மா: 281)

என்ற பாவும் இச் சொற் பொருள் நுட்பம் உணர்த்துகின்றன. 'பால்' எனின் 'முறை' என்ற அரும்பொருளில் ஆளப் பட்டுள்ளது. இச் சொல் சங்க இலக்கியத்துல் 'ஊழ்' என்ற பொருளிலும் 'முறை' என்ற பொருளிலும் வழங்குவதை அறிவோம்.

நினைவின் பதிவாகவே மொழி உருக்கொள்கிறது. நினைவோட்டத்திற் கேற்பவே சொல்லாட்சி பேச்சிலும் எழுத்திலும் இடம் பெறுவதியல்பு. தமிழ்மொழி நினைவின் இயக்கத்தை யொட்டியே பொருளமைதியும் சொல்லமைவும் கொண்டிலங்கும் மொழி. ஏனைய மொழிகளின் பால் இத்துணை இயற்கை இசைவு—பொருத்தம் அமையவில்லை. இத்தகு சொல்லாட்சிக்குக் கோடிக் கணக்கான சான்றுகளை நாம் தமிழிலக்கியத்தில் காட்டமுடியும். இவண், பரிபாடலிலிருந்து ஒரு சான்றை உன்னுவோம்.

......அதனால்
பகைவர் இவர்; இவர் நாட்டோர் என்னும்
வகையும் உண்டோ நின்மர பறிவோர்க்கே'' (3-பரி: 57—8)

பகைவனைக் கண்டதும் நம் மசுத்தில் 'அதோ பகைவன்' என்ற பகை யுணர்வே முதன் முதல் முனைந் தெழும். இந் நுட்பம் உணர்த்தப் பகைவர் என்ற சொல்லை முதலில் அமைத்துப் பின் 'அவர்' என்ற சுட்டுப் பெயரைப் பின் அமைத்த திறம் பாராட்டத்தக்கதாம். முதலில் அன்பர்கள் நினைவு 'அவர்களையே' விருப்பத்தோடு நினைவூட்டுவதனால் 'இவர்' எனச் சுட்டுப் பெயரை முன்னமைத்துப் 'நட்டோர்' என்ற சொல்லைப் பின்னமைத்தார். இத்தகைய சொல் லாட்சி நுட்பமே புலமையின் அருந்திருவினையாம்.

'பாட்டுச் சொல்' அக்கால வழக்குரை நடையையும், வர லாற்றுச் செய்திகளையும், வாழ்வு நுட்பங்களையும் நமக்கு அறிவிக்கின்றனர். 'தோழம்' என்ற சொல் மிகப் பெரிய எண்ணிக்கையை—அளவைக் குறிக்கும் கலைச் சொல். இப் பேரெண்ணுப் பெயர் பரிபாடலிலும், தேவாரத்திலும் ஆளப் பட்டு, அக்காலக் கணக்குக்கலையின் ஆராய்ச்சி யறிவையும், விரிந்த அறிவியல் வளத்தையும் காட்டுகிறது;

''உகாஅ வலியினொடு தோழம் காலம் (பரி: 13—70 ஆம் அடி)

என்ற பாடலடியில் புலவர், நல்லெழுநியார் காலக்குறி யீட்டினைத் 'தோழம்' என்ற பேரெண்ணால் பண்டைத் தமிழர் அளவிட்டுக் குறிப்பிட்டதைத் தெளிவாகக் காட்டுகிறார்.

'உண்ணற் கரிய நஞ்சை யுண்டு
ஒரு தோழம் தவர் விண்ணிற் பொலிய'

என்ற தேவாரப்பாவில் சம்பந்தர் இச் சொல்லை ஆண் டுள்ளார்.

'ஆணம்' என்ற சொல்லுக்குக் 'காவல்' என்ற பொருள் பரிபாடலில் அமைந்து வழங்குவது சுவை பயக்கிறது. ஆள், ஆண், ஆண்மை என்ற சொற்களின் வளர்ச்சிக்கும், பொருட் பேற்றுக்கும் புத்தொளி காட்டுகிறது. 'ஆணம்' என்ற அருஞ் சொல்லாட்சி:

........நின் ஆர்வலர்
தொழுதகை யமைதியின் அமர்ந்தோயு நீயே

அவரவர் ஏவலாளனு நீயே
அவரவர் செய்பொருட்கு ஆணமும் நீயே'' (பரி: 4—70-73)

என்ற பாவில் கடுவனிள வெயினனுர் இவ்வருஞ் சொல்லைப் பெய்துள்ளார்.

அக்காலத்தில் வேலி யமைக்க 'வேல்' என்ற போர்க் கருவியை பயன்படுத்தினர். இதனுல் எல்லை வரையறைக்கு 'வேலி' என்ற பெயர் அமைந்தது. இதனை மருதனிள நாகனுரின் 131 ஆம் அகப் பாட்டும் கலிங்கத்துப் பரணியும் நிலைநிறுத்துகின்றன.

"வீளை அம்பின் விழுத்தொடை மழவர்
நாள் ஆஉய்த்த நாம வெஞ் சுரத்து
நடை மெலிந்து ஒழிந்த சேட்படர் கன்றின்
கடைமணி உகுநீர் துடைத்த ஆடவர்
பெயரும் பீடும் எழுதி அதர் தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்
வேல்ஊன்று பலகை வேற்றுமுனை கடுக்கும்
வெருவரு தகுந கானம் நம்மொடு
வருக என் னுதியாயின்
வாரேன் நெஞ்சம் வாய்க்க நின் வினையே'' (அகம்: 131)

"தோலாத களிற்று அபயன் வேட்டைப் பன்றி
தொழு வடைத்துத் தொழுவதனைக் காப்பார் போ
வேலாலும் வில்லாலும் வேலி கோலி
வெற்பதனை விடியளவுங் காத்து நின்றே''
(கலிங்கத்துப்பரணி: 464)

இது காறும், பாவினச் சொல் இன்னதென்றும், அதன் பயனும், பொருட் சிறப்பும், தமிழ்ச் சொல்லின் மாட்சியும், அச் சொல்லாட்சி உணர்த்தும் வாழ்வும் சொல்லாற்றுச் சான்றும், அறிவுத் திறமும் ஒரே வழி ஆராய்ந்து கொண்டோம். இஃதனைய கண்ணேட்டத்தில் தமிழிலக்கியங்களில் ஆய்ந்துணரப்படின் தமிழின் அருமை பெருமை தெற்றெனப் பெருகும்.

"வேள் எவ்வி" [நாடகம்]

ச. பாலசுந்தரம்.

காட்சி :— 4.

இடம் :- நாரந்தமலைக் குகை.

மாந்தர் :- பசும்பூண் வேடர் தலைவன் மகிழ்நன், அவன் மகள் அருள்மொழி, வேட்டுவ வீரன்

மகிழ்நன் :- பாண்டியன் நெடுஞ்செழியன் என்னைப் படைத்துணை கேட்குமளவிற்குப் புகழ்பெற்ற நான்; இந்தப் பஞ்சைப்படையை வைத்திருக்கும் எவ்வியிடத்தில் தஞ்சம் புகுவதா? நெருப்பு சிறுத்தால் வெம்மை போகுமா? சீச்சீ...... புலி பசித்தால் புல்லையா நாடும்? மிழலைக் கூற்றத்தில் எனக்கும் ஒரு கூறு கொடுக்க வேண்டும். இன்றேல், அவனைக் கூறு படுக்க வேண்டும்.. ...

[மகிழ்நன் வெகுளிச் சிரிப்புச் சிரிக்கின்றான். அவன் மகள் அருள்மொழி அதுபோது அவனிடத்தில் வருகின்றாள்]

அருள் :- அப்பா! உங்கள் வாட்டத்தைப் பார்க்க .....

மகிழ் :- ஒன்றுமில்லை அம்மா.

அருள் :- முகத்தின் முறுக்குறைந்ததில்லை அப்பா. அகத்தின் வெம்மை ஆவியாக வருகிறது. தாங்கள் மறைக்கிறீர்கள்! வெற்றியும் தோல்வியும் வீரர்களுக்குச் சமந்தானே?

மகிழ் :- அம்மா என் சிந்தனை தோல்வி பற்றியதல்ல வாழ்வு பற்றியது.

அருள் ;- ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பார்களே.

மகிழ் :- நன்றி கெட்டவனோடா? என்னை வென்று விட்டதாக இறுமாந்திருக்கிறான் எவ்வி. சென்றுவிடவில்லை என்னுயிர். செந்தமிழ்நாடு இவன் தந்தை உரிமையா?

அருள் :- பகையை வளர்ப்பது

மகிழ் :- பண்பு இல்லை என்கிறாயா? படைச்செருக்கால் இடையூறு புரிந்தது யார்?

அருள் :- நண்பனாக்கிக் கொண்டால் துன்பமில்லையே அப்பா.

மகிழ் ;- வேந்தர்களும் விழையும் என் நட்பின் பெருமையை வேளிர் சிறுவன் எப்படி அறிவான்?

அருள் :- நம்மீதும் ...தவறு இருக்கிறதே அப்பா.

மகிழ் - [வெகுண்டு] என்ன சொன்னாய்? தவறு! எது தவறு? என்ன தவறு? ...

அருள் :- எவ்வியின் எல்லையில் புகுந்து தொல்லை கொடுத்தது. • கொள்ளையிட்டது......

மகிழ் :- கொள்ளை ! . எது கொள்ளை ? மலையிலே வாழும் நமக்கு நிலமில்லை ; வளமில்லை. வாழ்வதெப்படி ? பெரும்படை கொண்டு வேந்தர்கள் பிற நாட்டைக் கொள்ளையிட்டால் அது வீரம். வேடர்கள் செய்தால் சோரம். இது என்ன முறை.

அருள் :- அப்பா! நமது உரிமையை நேர்மையாகப் பெற முடியாதா?

மகிழ் :- நேர்மை ! அப்படி ஒன்றிருக்குமானால் உலகில் படைக் கருவிகளும் போர்வீரர்களும் வேண்டுவதில்லையே. வலிமையினால் நமது அரிமணத்தை வளைத்துக்கொண்டான் எவ்வி ஒரு பக்கம் தேவைக்கு மிகுதியாக நிலமோ பொருளோ உள்ள வரையில் போர் நிகழ்ந்துகொண்டே இருக்கும்

அருள் :- அப்பா ! போர்தானு மக்கள் வாழ்க்கை.

மகிழ் :- அம்மா ! நீ அரசியலில் தலையிட்டுக்கொண்டு குழம்பாதே உன் வேலையைப் பார்.

அருள் :- அப்பா ! எனக்குத் தந்தையும் தாயும் நீங்களே. உங்கள் வாழ்வே என் மகிழ்வு. நீங்களே வெறுத்தால் என் மனக் கருத்தை யாரிடம் சொல்லி ஆறுதல் அடைவேன்......... ... அம்மா.........

[அருள்மொழி விம்முகிறாள். மகிழ்நன் சிறிது மனந் தளர்ந்து பேசுகிறான்.]

மகிழ் : அம்மா ! உன் மனம் நோகப் பேசிவிட்டேன். நம்மை நம்பியிருக்கும் வேடர்களுக்கு வாழ்வளிப்பது நம் பொறுப் பல்லவா ? உன் விருப்பந்தானென்ன ?

அருள் :- எவ்வியோடு உடன்பாடு செய்துகொண்டால் இரு திறத் தாருக்கும் நன்மையல்லவா ?

மகிழ் :- என்ன..... ! உடன்பாடா ? அம்மா ! என்னுடைய குருதியில் இன்னும் தன்மான உணர்ச்சி மடியவில்லையே. மறக் குடியிலே பிறந்த நான் மண்டியிடக் கற்கவில்லையம்மா. மானங் கெட்ட ஈன வாழ்வை எண்ணியதில்லை என் உள்ளம். அடிமையாகும் உடலில் உரிமை வேட்கும் என்னுயிர் தங்காதம்மா.

அருள் :- அப்பா ! மன்னியுங்கள். உங்கள் உள்ளத்தைப் புண் படுத்திவிட்டேன். நான் உங்கள் மகள். வேந்தர்கள் நட்பினும் வேளிர்கள் நட்பு நன்மை தருய என்று எண்ணினேன்.

[ஒரு வேட்டுவ வீரன் அவ்விடத்து வருகிறான். அருள்மொழி எழுந்து செல்கிறாள்.]

வே. வீ :- [மகிழ்நனிடம்] தலைவரே ! வணக்கம். நாம் அடங்கி விட்டதாக எண்ணி எவ்வி இறுமாந்திருக்கிறான். ஊருக்குள் காவல் குறைவு நம்மவர்கள் மாற்றுடையில் உலவுகிறார்கள்.

மகிழ் :- நன்று நாளை நள்ளிரவு நமமுடைய வீரர்களை யெல்லாம் உச்சி மலைக்கு வருமாறு செய்க ஒற்றர்கள் மட்டும் உலவி வரட்டும மற்றவைகளை அங்கு முடிவு செய்வோம்.

வே. வீ :- பகைவர்கள் ஒய்ந்திருக்கும் காலம் பார்த்து நாம் பாய்ந்து அவர்களை, வெல்லவேண்டும். முதலில் படைக் கருவிகளைத் திரட்டவேண்டும். தலைவரே! அரண்மனையில் உள்ள படைக் கலக்கொட்டிலைக் கொள்ளையிட்டால்.........?

மகிழ் :- அது பின்னர் செய்யவேண்டியவேலை. எவ்வியை எதிர்ப்பது அவ்வளவு எளிமையில்லை. நம் வீரர்கள சோர்ந்துள்ளனர்.

வே. வீ :- பாண்டிய மன்னனைப் படைத்துணை கேட்டால்.....?

மகிவ் :- முதற்கண் நம மதித் துணையைத்தான் மதித்திட வேண்டும் அடுததது படைத்துணை. எவ்வியின் ஆட்சியைச் சூழ்ச்சியால் தகர்க்க வேண்டும். நாளை ... ...

வே. வீ:- குறித்த இடத்தில் கொண்டுவத்து சேர்க்கிறேன். நம வீரர்களை வணக்கம்

[வேட்டுவ வீரன் போகிறுன். மகிழ்நன் தனிமையில்......]

பகிழ் :- காரணமின்றிப் படைத் துணைக்கேட்டால் பாண்டியன் உடன் படான். ஆம, பாண்டியனையே பகைவனுக்கி விட்டால் எப்படி முடியும்......? ஏன் முடியாது?......நமமவர்களுள் சிலரைப் புலவராக்கிப் பாண்டியன் புகழ்பாடச் செய்யவேண்டும். அதனை எவ்வியின வீரர்கள் எதிர்ப்பார்கள். இச் செய்தி ஒற்றர் மூலம் பாண்டியனுக்கு எட்டும். நம திட்டம நிறை வேறும. முதலில பாணரிடமும், பாவலரிடமும் உள்ள பொருளைக் கொள்ளையிட்டால் அவர்கள் வள்ளலிடம் முறை யிடுவார்கள். ஆம......! இந்தச் சூழ்நிலையை முதலில் உரு வாக்க வேண்டும பின்னர் வெற்றி! [வெகுளிச் சிரிப்பு]

காட்சி :— 5.

இடம் :- நீடூருககுப் புறத்தேயுள்ள காடு

மாந்தர் :- பாணன், புலவர்.

புலவர் :- பண்ணிசை நிரப்பும் பாணரே! தாங்கள் எவ்வூரோ?

பாணன் :- யாதும் ஊரே யாவரும் கேளிர். உமக்கு என்ன வேண்டும்?

புலவ :- நீடூர் செல்ல நெறியறிதல் வேண்டும்.

பாண :- புரிகிறது .. புரிகிறது. பைந்தமிழ்ப் புலவரே! நீடூர் தேடிப்பாடவந்தீரோ?

புலவ :- வினவுக்கு எதிர் வினு விடுப்பதை விடுத்து விடை சிறிது உரைத்தால்.....

பாண :- கால்நோவ வந்து கவி பாடப்போகும் கவிராயரே! நீவிர், இக்காடு கடந்தால் நீடூர் காண்பீர். கண்டுதான் என்னபயன்?

புலவ :- என்ன பயனு? தமிழவேள் எவ்வியைத் தாமறியீரோ?

பாண :- அவ்விடம் சென்ருல் எவ்வியைக் காண்பீர். அவனும் வரிசையில் மேம்படு பரிசிலைத் தருவான். பின்......

புலவ :- நீரும் அங்குச் சென்றிருந்தீரோ?

பாண :- ஆம், வறுமையால் வாடினேன்.

புலவ :- கலைஞருக்கு இயற்கை.

பாண :- வள்ளலை நாடினேன்.

புலவ :- உள்ளம் இல்லாதவர் எள்ளி நகைப்பார்.

பாண :- கள்ளமில்லாமல் அள்ளி வழங்கினுன்.

புலவ :- உமது உள்ளம் நிரம்பவில்லை போலும்.

பாண :- இல்லையில்லை...... அவை கொள்ளை போயின.

புலவ :- [திடுக்கிட்டு] ஆ! எவ்வியின் நாட்டிலா இந்தக் கொடுமை.

பாண :- ஆம். யாதும் ஊரே யாவருங் கேளிர், தீதும் நன்றும் பிறர்தர வருமே.....

[பாடலில் தவறுகண்ட புலவர் அதனைச் சுட்டி]

புலவ :- தவறு, தவறு. தீதும் நன்றும் பிறர்தர வாரா என்பது பாடம்.

பாண :- படிக்கும் பாடம் வேறு. நடக்கும் பாடம் வேறு; நன்று தருவானை நாடி நிற்கின்றீர் நீர். என் பொருளைக்கொண்டு சென்ருனை வாடி நிற்கின்றேன் யான்.

புலவ ;- ஆம். புலமையும் கலையும் பொதுமக்கள் பொருளாக மதிக்கும் நாள்வரையிலும் இந்தப் புன்மை நிகழ்ந்துகொண்டு தானிருக்கும். வருகிறேன்; பாணரே! வணக்கம்.

பாண :- போய் வாருங்கள்; வணக்கம்.

காட்சி :— 6.

இடம் :- நீடூர்க் கலைக்கழகம்.

மாந்தர் :- கலைஞர், வேங்கை வீரன். மற்ருெரு வீரன்.

கலைஞ 1 :- செந்தமிழ்ப் புரவலன், செங்கோல் மன்னவன், சேர சோழரின் சினமடக்கிய செம்மல், தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் வாழ்க!

[பாண்டியனைச் சிறப்பித்து பாடுகிறார்கள் சிலர்

[இக் குரல் ஒலி கேட்டு அவ்வழியாக வந்த வேங்கை வீரனும், மற்றொரு வீரனும் நின்று கவனிக்கிறார்கள்]

கலைஞ 2 :- எழுவரை வென்ற முழவுறழ் திணிதோள், பாவலர் பாடும் வேம்பார் தெரியல் விறல் மிகு வீரன் பாண்டியன் நெடுஞ்செழியன் வாழ்க! மீன் கொடி ஆட்சி எங்கெங்கும் மேவுக!

[வீரன் அக் கலைஞர்களிடம் வருகிறான்]

வீரன் : பாண்டியன் புகழ்பாடும் பாவலரே! இது பிழைக் கூற்றம்.

கலைஞ 1 - மழலை பேசும் குழவிகளல்லேம்யாம்

வீரன் :- மாட மதுரையைத் தேடி வந்தீரோ ?

கலைஞ 1 :- நாடு தெரியாத மூடர்களல்லேம்.

வீரன் 1 :- (கோபத்தோடு) நன்றிகெட்ட நாவலர்களே! மாவேள் நீடூரில் நீர் மாற்றவரைப் புகழ்தல் ஏற்றதாகாது.

கலைஞ 1 : பொன்னுக்குப் புகழ்பாடும் புலவர்களல்லேம் யாங்கள்.

புலவர் :- வேடர்களை அடக்க வீரமில்லா எவ்வியைப் பாட வரவில்லை யாங்கள்.

[வேங்கை வீரன் அவனிடத்து வருகின்றான்)

வே. வீ :- [கலைஞருள் முதலாமவனை நெருங்கி] யாது கூறினாய்?...... பேதையே! தீதுபுரியும் ஐந்தசம் படைகளே! தப்பி ஓடுங்கள்!... இல்லையேல் தலைபோகும்.

[வேங்கை வீரன் வாளை உருவிக் காட்டுகிறான்.]

கலைஞ 1 :- வாள் காட்டிக் கலை வளர்க்கும வள்ளலின் நாடு இது என்பது தெரிகிறது.

[வேங்கை வீரன் தன் வீரனைப் பார்த்து கலைஞர் வேடதாரிகளைத் துரத்தக் கட்டளையிடுகிறான்.]

வே. வீ :- இவர்களை அடித்துத் துரத்துங்கள்.

வீரன் :- அண்டிக்கெடுக்கும் அறிவிலிகளே! ஓடுங்கள்! ஓடுங்கள்!

[வீரன் வாளைச்சுழற்றியபடி விரட்டுகிறான். அப்பொழுது சிலர் ' எவ்வி ஒழிக! என்றும், பாண்டியன் வாழ்க! என்றும், கொள்ளை! கொள்ளை! என்றும் கூக்குரலிட்டு ஓடுகிறார்கள்.]

காட்சி :— 7.

இடம் :- எவ்வியின் அரசவை.

மாந்தர் எவ்வி, அமைச்சர், வேங்கை வீரன், வீரர்கள்.

அமை :- மன்னவா! நாட்டில் புதுமையான ஒரு குழப்பம். பசும்பூண் பொருந்திலர் மேலும் கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர்.

வே. வீ :- மறைந்து வாழும் மகிழ்நனின், சூழ்ச்சியாக இருக்கலாம்.

எவ்வி :- எப்படியும் மக்களுக்கு இடையூறு நேராவண்ணம் காப்பது நம் கடன்.

வே. வீ :- கோளரி ஏறுமுன் குறுநரிக்கூட்டம் என்ன செய்யும்? குன்றுதோள் வீரர்கள் இன்றும் உள்ளார்கள் நம்மிடத்தில் பகைவரைக்கொன்று குவித்துப் பரணி பாடச் செய்கிறேன்.

எவ்வி :- வினையெச்சமும் பகையெச்சமும் தீயெச்சம் போலத்தெறும் என்பது எவ்வளவு உண்மை!

அமை :- பாண்டியன் புகழ் பாடுதற்கு ஏதாவது அடிப்படை இருக்க வேண்டும். பாண்டியர் ஆட்சியை ஈண்டு ஏற்படுத்த நினைக்கின்றார்களோ?

வே. வீ :- கொள்ளைக்காரர்களுக்கு யாராட்சியானால் என்ன? தெய்வமும் மக்களும் திருடர்களுக்கு ஒன்று.

அமை :- பாண்டியனே இச் சூழ்ச்சியைச் செய்திருக்கலாமோ?

எவ்வி :- கடந்தடுதானை நெடுஞ்செழியன் இந்தப் பண்பற்ற செயலைச் செய்யான். பெருவீரன் குறுவழியில் செல்வான்?

வே. வீ :- இந்தச் சுண்டெலிக் கூட்டத்தைக் கண்டு அஞ்சுவதா?

அமை :- நெடுஞ்சுவர்க்கு ஊறு விளைப்பது சுண்டெலிகள் தான் என்பதனை

வே. வீ :- மறுக்கவில்லை. அரசே! இலக்கியக் கழகங்களில் வேற்றவர் புகழ்பாடும் வீணர்களை அறிந்துவர ஒற்றர்களை அனுப்பியுள்ளேன்.

அமை :- பாண்டியனையே பகைவனாக்க எண்ணுகிறான் மகிழ்நன்.

வே. வீ :- பாண்டியனாயினும், ஆண்டவனாயினும் ஆகட்டும். எவ்வியை எதிர்த்தால் அவர்களை எமனுக்கு விருந்தாக்குவேன். பல்குறும்பும் பாழ்செய்யும் உட்பகையும் நாட்டிற்குத் தீங்கு. இந்தக் குறும்பர்களைப் பிடித்துச் சிறை செய்யவேண்டும். காவல! தங்கள் கருத்து.

எவ்வி :- அப்படியே செய்க.

காட்சி :— 8.

இடம் :- தெரு.] [மாந்தர் :- வள்ளுவன், பொதுமக்கள், ஒற்றர்.

வள் :- (திடும்... திடும்... திடும்... பறையொலி) மிழலைக்கூற்றத்து குடிமக்களே! மேலோர்களே! மன்னர் வேள் எவ்வியின் ஆணை. பசும்பூண் பொருந்திலர்களின் பண்பற்ற கிளர்ச்சியை அடக்க இடங்கள் தோறும் படை வீரர்கள் சென்றுள்ளார்கள். பாண்டியன் பெருமையைப் பாடுவதாகச் சொல்லி அரசியலுக்குக் கேடு சூழும் அனைவரும் சிறைப் படுத்தப்படுவார்கள். மாற்றவர் புகழ் இந்தக் கூற்றத்திலே ஒலிக்கக்கூடாது. காட்டிக்கொடுப்பவரைப் பொது நலத்திலே நாட்டமுடையவர்கள் பிடித்துத்தரவேண்டும்: அவர்களுக்குத் தக்க பரிசு அளிக்கப்படும் ...திடும் .....திடும்.. ...திடும் .....

[வள்ளுவன் செல்லுகிருன். அப்பொழுது பாண்டிய நாட்டு ஒற்றர் இருவர் செய்தி அறிந்து பேசுகின்றனர்.]

ஒற் 1 :- நண்பா! இதனை உடனே நம் பாண்டிய மன்னருக்கு அறிவிக்க வேண்டும். நெடுஞ்செழியனுக்கு எதிர்ப்பு இந்த நீடூரிலிருக்கின்றது என்பதனை நாளையே மதுரைக்குச் சென்று உரைத்து வருதல் வேண்டும்.

ஒற் 2 :- ஆம். அவ்வாறே செய்கிறேன்.

காட்சி :— 9.

இடம் :- நரந்தமலைக் காடு.

மாந்தர் :- மகிழ்நன், வேட்டுவ வீரன், வேங்கை வீரன், வேடன். அருள்மொழி.

வேட். வீ :- தலைவரே! பாண்டியன் புகழ்பாடிய நம் மறவர்களில் பலர் சிறை செய்யப்பட்டுள்ளார்கள். பாவலர் பொருளும், பாணர் பொருளும், நம் மலைக்குகை வந்து சேர்கின்றன.

மகிழ் :- நம்முடைய திட்டம் இதுவரை ஒழுங்காக நடைபெற்றுள்ளது. இனி ...

வேட். வீ :- நம் கிளர்ச்சியுள் பாண்டியன் பெயரை வேண்டியதன் கருத்து......

மகிழ் :- அது பின்னால் தெரியும்.

வேட். வீ ஆனால், இப்பொழுது அதனால் வருந்தொல்லை.

மகிழ் :- இல்லை, இல்லை எவ்வியின் வாழ்நாளாகிய வேரிலே ஊற்றப்படும வெந்நீர்தான் பாண்டியன் பெயர். இனி நீ சில வீரர்களை அழைத்துச் சென்று அரண்மனையில் கொள்ளையிட வேண்டும்.

வேட். வீ:- அப்படியே செய்கிறேன்.

மகிழ் :- பொருளை அல்ல. நீ முன்பு கூறினாய் அல்லவா? படைக்கலக் கொள்ளை. எதிரிகளுக்கு ஒரு சிறு கருவிகள்கூட இல்லாமல் செய்ய வேண்டும்.

வேட் வீ :- நல்லது அப்படியேசெய்து விடுகிறேன். வேங்கைவீரனும் அவனுடைய ஆட்களும் நம்மிடத்தை வேவு பார்க்கிறார்கள்.

மகிழ் :- அப்படியா?... நம் மறவர்களில் சிலரை நம் குகைக்கு அருகே நிறுத்து. ஐயப்படத்தக்கவர் யார் வந்தாலும் அவர்கள் தலையைக் கொய்துவிடச் செய்.

வேட் வீ :- ஆகட்டும். வணக்கம்.

[வேட்டுவ வீரன் சொல்லுகிறான். மகிழ்நன் தனிமையில்......]

மகிழ் :- இப்பொழுதே பாண்டியனுக்குச் செய்தி அனுப்ப வேண்டும். ஆம், போர், பாண்டியனுக்கும் எவ்விக்கும். ஆனால், வெற்றி மகிழ்நனுக்கு ....

[சிரிக்கின்றான்; போகின்றான். அவன் சென்ற பின்னர் வேங்கை வீரன் மாற்றுடையில் பதுங்கிப் பதுங்கி வருகின்றான். அவனுக்குப் பின்னேவந்த வேடன் ஒருவன் கைத் தடியால் தாக்குகின்றான். வேங்கை வீரன் 'ஆ!' என அலறிக் கீழே விழுந்து மூர்ச்சிக்கின்றான்.]

வேடன் :- தூ! ஒரே அடியில் உயிரை விட்டுட்டான்......

[வேங்கை வீரனின் இடையில் தொங்கிய உடைவாளை எடுத்துக்கொண்டு.....

இந்த வீரனுக்கு வாள் வேறு......?

[வேடன் வாளை எடுத்துக்கொண்டு போகின்றான். அதுபோது ஆண் உடையில் அருள்மொழி அங்கு வருகிறாள்.]

அருள் :- இயற்கை அளித்த செல்வத்தைககொண்டு விலங்குகளும் பறவைகளும் இன்பமாக வாழ்கின்றன, ஆனால்... ..

[எனப் பேசிக்கொண்டேவந்தவள் கீழே மூர்ச்சையாகிக்கிடக்கும் வேங்கை வீரனின் உடலில் இடறித் திடுக்கிடுகிறாள்..]

ஆ! இது என்ன?

[குனிந்து மூக்கில் விரலை வைத்துப் பார்த்து விட்டு......]

உயிர் இருக்கிறது......

[அருள்மொழி ஓடிச்சென்று ஒரு பச்சிலையைக்கொண்டுவந்து வேங்கைவீரனின் முகத்தருகே பிழிகிறாள். வேங்கை வீரன் புரண்டுகொண்டே..... தண்ணீர் ... தண்ணீர்.. ...என்கிறான். அருள்மொழி ஓர் இலையிலே தண்ணீர்கொண்டு வந்து தருகிறாள். வேங்கை வீரன் அதனைக் குடிக்கிறான்]

அருள் :- ஐயா! மிகவும் களைத்திருக்கிறீர்கள். இவ்விடத்திலிருந்தால் மேலும் துன்பம் விளையும், மெல்ல என்னுடன் வாருங்கள்.

[வேங்கை வீரன் முனகிக்கொண்டே வேதனையுடன் எழுந்து நடக்கிறான். இருவரும் குகை நோக்கிச் செல்லுகின்றனர்.]

(தொடரும்)

STATEMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT NEWSPAPER

"THE TAMIL POZHIL"

(MONTHLY)

FORM IV

Rule 8 of the Press and Registration of Books act, 1867.

Place of Publication	:	Thanjavur
Periodieity of its Publication	:	Monthly.
Printer's Name	:	Sri N. Chinniah, for T.V.M Mahalingam Mahalingam Press.
Nationality	:	Indian
Address	:	1321, South Rampart, Thanjavur
Publisher's Name	:	S. Swayamprakasam B.A., B.L.,
Nationality	:	Indian.
Address	:	Karanthai Tamil Sangam, Karuntattamkudi, Thanjavur
Editor's Name	:	S. Swayamprakasam, B.A., B L.,
Nationality	:	Indian.
Address	:	President, Karanthai Tamil Sangam, Karuntattankudi, Thanjavur.
Name and address of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital.		KARANTHAI TAMIL SANGAM THANJAVUR.

I, S. Swayamprakasam hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date: 21—3—85

S. SWAYAMPRAKASAM,
Signature of Publisher.

Regd. No. M. 7681.

விற்பனைக்குக் கிடைக்கும் நூல்கள்.

தொல்-சொல்—தெய்வச்சிலையார் உரை	...	2—50
நெல்லை வருக்கக் கோவை	...	0—12
சித்தரந்தாதி	...	0—12
சுருதி வீணை	...	0—25
தமிழரசி குறவஞ்சி	...	0—62
பரத சாத்திரம்	...	1—00
கவியரசு நினைவு மலர்	...	1—00
சிவமும் செந்தமிழும்	...	0—25
சிலப்பதிகாரம் — புகார்க் காண்டம்	...	0—50
Garland of Tamil Poetry	...	2—00
கச்சிக் கலம்பகம்—(பூண்டி அரங்கநாத முதலியார்)	...	0—50
அப்பர் புகழ்மாலை		0—25
சுந்தரர் புகழ்மாலை	...	0—25
பாரதசார வெண்பா	...	1—00
தொல்-பொதுப்பாயிரம் உரை	...	0—12
யவன மஞ்சரி (த. இராமநாத பிள்ளை B. A., யாழ்ப்பாணம்)		1—50
இந்தியத் தலயாத்திரை (T. B. தாஸ் ராவ் B. A.,)		1—25
புலவராற்றுப்படை (அமிர்தம் சுந்தரநாத பிள்ளை)	...	0—25
கரந்தைக் கட்டுரைக் கோவை	...	1—75
தமிழ்ப் பொழில் துணர்கள் 1, 4, 5, 6, 8, 29, 31, 32, 34, துணர் ஒன்றுக்கு (12 மலர்கள்)	...	4—00

கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு அளிக்கப்பெறும் நன்கொடைகள் வருமான வரிச் சட்ட பிரிவு 15-Bயின்படி வருமான வரிவிதிப்பிலிருந்து விலக்கப்பெற்றிருக்கின்றனவென்று சென்னை வருமானவரிக் கமிஷனர் அவர்கள் தமது 13-9-60-ஆம நாளைய சி. நெ. 212 (27) 58 உத்தரவில் அறிவித்திருக்கிறார்கள்.

தமிழ்ப் பொழிலின் கையொப்பம்

		உள்நாடு.	மலேயா, இலங்கை முதலிய வெளிநாடுகள்
முன்பணம் ஆயுள் வரி	ரூ.	50 00	50 00
,, ஆண்டு வரி சங்க உறுப்பினர்க்கும் தலைமையாசிரியர் ஒப்பம்பெற்ற தனிப்பட்ட மாணவர்க்கும்		2 00	2 50
,, ,, ஏனையோருக்கு		3 00	3 50

Edited and Published by S. Swayamprakasam, B. A., B. L., Karanthai Tamil Sangam, Tanjore. Printed by N. Chinniah for T.V.M. Mahalingam Mahalingam Power Press, 1321, South Rampart, Tanjore

CONNEMARA PUBLIC LIBRARY
22 NOV 1965